அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

PATTAVAKUPPUC CEYYUT
KŌVAI

பட்ட வகுப்புச்

# செய்யுட் கோவை

## B.A. & B.Sc., Part-I

## TAMIL POETICAL SELECTIONS

1972—'74

CONNEMARA PUBLIC LIBRARY
14 OCT 1973
MADRAS

pliments

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

P. 2-50

CONNEMARA PUBLIC LIBRARY
14 OCT 1973
MADRAS

## உள்ளுறை

| | | | |
|---|---|---|---|
| 1. | பட்டினப்பாலை | ... | |
| 2. | கலித்தொகை | ... | கச |
| 3. | புறநானூறு | ... | உ |
| 4. | நாலடியார் | ... | உ |
| 5. | சிலப்பதிகாரம் | ... | நக |
| 6. | சீவகசிந்தாமணி | ... | ச |
| 7. | கம்பரிராமாயணம் | ... | அ |
| | குறிப்பு | ... | க |
| | இலக்கண நூற்பாக்கள் | ... | ககஉ |

சிவகாமி அச்சகம்
அண்ணாமலைநகர்

MADRAS 14 OCT 1973 LIBRARY

# 1. பட்டினப்பாலை

பண்டைத் தமிழ்ச் சான்றோர் பாடிய பாட்டும் தொகையும் சங்க இலக்கியம் எனப்படும்.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி — மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

எனவரும் வெண்பா பத்துப்பாட்டுள் அடங்கிய பாக்களின் பெயரினைத் தொகுத்துரைக்கும். பத்துப்பாட்டுள் மிகவும் சிறியது 103 அடியையுடைய முல்லைப்பாட்டு. மிகவும் பெரியது 782 அடியுடைய மதுரைக்காஞ்சி.

பட்டினப்பாலை 301 அடி உடையது. இதன் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். கடியலூர் - ஊரின் பெயர். உருத்திரன் - தந்தையின் பெயர். கண்ணனார் - இயற்பெயர். இவரே பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையனைப் பாடியுள்ளார். குறுந்தொகை 352-ஆம் பாடல், அகநானூறு 167-ஆம் பாடல் இவர் பாடியனவே.

பட்டினப்பாலைப் பாட்டுடைத் தலைவன் திருமாவளவன். இவன் கரிகாற் பெருவளத்தானே என்பர் பலர்; ஆயின் மகா வித்துவான் ரா. இராகவையங்கார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனே என்பர். இந்நூலிற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், மறைமலையடிகளார், ரா. இராகவையங்கார் எழுதிய உரைகள் உண்டு. உருத்திரங் கண்ணனார் பட்டினப்பாலை பாடிப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு பெற்ற செய்தியைச் செயங்கொண்டார் குறித்துள்ளார். மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டில் படையெடுத்த

ஞான்று, பட்டினப்பாலைப்பாவலனுக்குப் பரிசிலாக நல்கப்பெற்ற பதினாறு கால் மண்டபத்தினைத் தவிர்த்துப் பிறவற்றைத் தகர்த்த கல்வெட்டுப் பாடற் செய்தி பைந்தமிழ்ப் பாவலன்பால் மாற்று வேந்தன் கொண்டிருந்த மதிப்பினை எடுத்துக்காட்டும்.

இந்நூலிற்கு வஞ்சிநெடும்பாட்டு என்ற பெயரும் பண்டு வழங்கிற்று (யாப். செய். 37). இலக்கிய இலக்கண உரைகளில் இந்நூல் பலராலும் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுள்ளது.

பட்டினப்பாலையென்பது பட்டினத்தில் பாலைத்திணையுணர்த்தும் நூலெனக் கருதின் ஏழாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். ஈண்டு, பட்டினம் என்றது காவிரிப்பூம் பட்டினத்தையேயாகும். ''முட்டாச் சிறப்பிற் பட்டினம்'' என வருதல் காண்க. பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிய பாலைத்திணையாதலின் இந்நூல் பட்டினப் பாலையாயிற்று. பாலையின் உரிப்பொருள் பிரிதலும் அதன் நிமித்தமும் ஆகும். பொருள்வயிற் பிரியும் தலைவன், பிரிவாற்றுளாய் அவலித்து அழுங்கிய தலைவியை ஆற்றுவிக்கும் பொருட்டு,

'முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே'

என்று நெஞ்சினை முன்னிலைப்படுத்து மொழிதலும், ஏகும் பாலை வழி, ''திருமாவளவன் தெவ்வர்க்கோக்கிய வேலினும் வெய்ய கானம்'' எனக் கடிவான்போல் கழறி, ''அவன் கோலினும் தண்ணிய தடமென்றோளே'' எனத் தலைவியின் நலம் பாராட்டலும் பாட்டின் உரிப்பொருளாய் ஒளிர்வன. ''வாரேன் வாழிய நெஞ்சே'' என்ற குறிப்பு தலைவியை ஆற்றுவித்துப் பின் பிரிதற்கே என்பது,

''செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்''
(தொல். கற். 44)

எனவரும் கற்பியல் நெறியால் உணரப்படும். எனவே இப்பாட்டின் உரிப்பொருள் பிரிதல் நிமித்தம் [ஆயிற்று. வேற்று நாட்டகல்வயின் விழுமத்துத் தலைவன் செலவழுங்கிக் கூறியது எனவரும் நச்சினார்க்கினியரின் துறைவிளக்கம் நோக்கத்தக்கது.

# பட்டினப்பாலை

## காவிரியின் சிறப்பு

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்

## சோணாட்டின் மருதவளம்

விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு

### படப்பை, தண்டலை, பொய்கை

வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்குங்
கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீ
னுருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
யிருகாமத் திணையேரிப்

### அட்டிற்சாலை

புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருத்துஞ்சுந் திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
வறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டுந்

### தவப்பள்ளி, கடிநகர்

தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவி
னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு
மாவுதி நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்

## பரதவர் வாழ்க்கைநிலை

தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கு
முதுமரத்த முரண்களரி
வரிமண லகன்றிட்டை
யிருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியு
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
யுறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்ப
ணிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்

மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்

## காவிரித்துறையின் சிறப்பு

புலவுமணற் பூங்கானன்
மாமலை யணைந்த கொண்மூப் போலவுந்
தாய்முலை தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கு
மலியோதத் தொலிகூடற்
றீதுநீங்கக் கடலாடியும்
மாசுபோகப் புனல்படிந்து
மலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டு
மகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்

## இன்பப்பெருக்கு

துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்தும்
மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும்
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்
மகளிர் கோதை மைந்தர் மலையவும்
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்துங்
கண்ணடைஇய கடைக்கங்குலான்

## சுங்கத்துறையினர் நிலை

மாஅகாவிரி மணங்கூட்டுந்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவி
னல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
றேர்பூண்ட மாஅபோல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது

## பண்டசாலை முற்றம்

வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
யேழகத் தகரோ டுகளு முன்றிற்

## மாடமகளிர் நிலை

குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்

புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குற்
றூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
யோங்குவரை மருங்கி னுண்டா துறைக்குங்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்

## ஆவணமும் பல்வகைக் கொடிகளும்

குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவரு வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்தப் பசுமெழுக்கிற்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரிய
ருறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிலிளக்குங் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன்றுறைத்

தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியும்
மீன்றடிந்து விடக்கறுத்
தூன்பொரிக்கு மொலிமுன்றின்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவி
னறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்

## வணிகர் மறுகு

செல்லா நல்லிசை யமரர் காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி

## உழவர் பெருமை

னீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலு
மேமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர்முன்றின் மீன்பிறழவும்
விலைஞர்குரம்பை மாவீண்டவுங்
கொலைகடிந்துங் களவுநீக்கியு
மமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
நல்லானொடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்

பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்

## வணிகர் சால்பு

நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்

## பலமொழியாளர்

பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்

## பாட்டின் உரிப்பொருள்

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே! கூருகிர்க்

## திருமாவளவன் தாயமெய்தல்

கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்

## பகைமேற் செலவு

கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை யுரட்டு முன்றா
ளுகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம்
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்

## பகைப்புல அழிவு

தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியும் மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவுங்
கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
பலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவு
மருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
யழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவு

மழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவுங்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவும்
கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானுப் பெருஞ்சோற் றட்டி
லொண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
வுணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவு
மருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற

## பகைவர் அழிவு

மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாண்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
விருங்கோவேண் மருங்குசாயக்

## சோழனின் ஆக்கப்பணிகள்

காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ

வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிரீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயின்
மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி

## மார்பின் மாண்பு

விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவு
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவுஞ்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூ
ணரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய

## பாட்டின் உரிப்பொருள்

வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

# 2. கலித்தொகை

எட்டுத் தொகை இலக்கியங்களுள் கலித்தொகையும் ஒன்று கும். கலிப் பாடல்களால் அமைந்த 150 பாடல்கள் இந்நூலில் உள்ளன. ''கற்றறிந்தார் ஏத்தும் கலி'' என்ற தொடர் இந் நூலின் மாண்பினைப் புலப்படுத்தும். இந்நூலில், கடவுள் வாழ்த்து, பாலை 35, குறிஞ்சி 29, மருதம் 35, முல்லை 17, நெய்தல் 33,—ஆக 150 பாடல்களைக் காண்கிறோம். இவற்றைப் பாடியவர்களைப்,

''பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுருத்தி ரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி''

எனவரும் வெண்பாவால் அறிக. நெய்தல் திணையினைப் பாடிய நல்லந்துவனார் கடவுள் வாழ்த்தினையும் பாடிக் கலித்தொகை நூலினைத் தொகுத்தவர் ஆதல் வேண்டும். கைக்கிளையும், பெருந்திணையும் அகத்திணையே எனத் தொல்காப்பியர் கருதிய நெறிக் கேற்பவே இவ்விரு திணைப்பொருள் உணர்த்தும் பாடல் கள் சில இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பாண்டி நாட்டுக் குறிப்புக்களே மிகுதியும் கலித்தொகையில் காணப்படுகின்றன. காதல் நெஞ்சங்களின் உணர்ச்சித் துடிப்புக்களையும், காதற் சிறப்புக்களையும், உவமை வளமும் ஓசை அழகும் பொதுளக் கற்போர் உள்ளம் களிக்கும் வகையில் கலித்தொகை ஆசிரியர் கள் பாடிய திறம் பாராட்டிற்குரியது. கூறவரும் கருத்துக்களைப் படிப்படியாக வளர்த்துக் காட்டுதலும், ஒரு பொருளை மூன்று வகைகளில் அடுக்கிக் கூறுதலும், உரையாடி முடிபுரைத்தலும் ஆகிய கற்பனைத் திறங்கள் சிந்தைக்கினிய விருந்தாம். பழந்தமி ழரின் பழக்கவழக்கங்களும் அரிய நீதிக் கருத்துக்களும் உலகியல் உண்மைகளும் இந்நூலில் நிரம்ப உள்ளன. இந்நூலிற்கு நச்சினார்க்கினியரின் உரை உண்டு. அகத்திணையைப் பாடு தற்குச் சிறந்த யாப்பாகத் தொல்காப்பியர் விதித்தவை கலிப்

பாவும் பரிபாடலுமாகும். இவ்விதிக்கேற்பவே இந்நூல் கலிப் பாக்களாலமைந்துள்ளது.

கலிப்பா ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக் கலி, உறழ்கலி என நால்வகைப்படும். நும் பாடப்பகுதியில் வந்துள்ள ஒத்தாழிசைக் கலிப்பாக்களில் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற நான்குறுப்புக்களைக் காணலாம்.

# கலித்தொகை

## பாலைக்கலி

### I

வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅங்
கானங் கடத்தி ரெனக்கேட்பின் யானொன்
றுசாவுகோ வைய சிறிது;
நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே
இவட்கே, செய்வுறு மண்டில மையாப் பதுபோன்
மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே;
நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே
இவட்கே, சுனைமா ணீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்கண் ணீர்நில் லாவே;
நீயே, புலம்பி லுள்ளமொடு பொருள்வயிற் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே
இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ
லிலங்கே ரெல்வளை யிறையூ ரும்மே;
எனநின்,
சென்னவை யரவத்து மினையவ ணீநீப்பின்
தன்னலங் கடைகொளப் படுதலின் மற்றிவள்

இன்னுயிர் தருதலு மாற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே.

துறை : பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குச் செலவழுங்கக் கூறியது.

## II

நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலி
னுறலூறு கமழ்கடாஅத் தொல்கிய எழில்வேழம்
வறனுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ்சேர
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின்மற் றைஇய;
வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோ
லேழுந்தம் பயன்கெட விடைநின்ற நரம்பறூஉம்
யாழினுந் நிலையிலாப் பொருளையு நச்சுபவோ;
மரீஇத்தாங் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறுந்
திருவினுந் நிலையிலாப் பொருளையு நச்சுபவோ;
புரைதவப் பயனோக்கார் தம்மாக்க முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்வௌவு
மரைசினுந் நிலையிலாப் பொருளையு நச்சுபவோ;
எனவாங்கு,
நச்சல் கூடாது பெரும விச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப அதுமனும் பொருளே.

துறை : தோழி பொருளது நிலையாமை சுட்டித் தலைவன் செலவழுங்கக் கூறியது.

## III

எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
என்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர றாயிர்நீர் போறீர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
எனவாங்கு,
இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

துறை: உடன்போய தலைவியைத் தேடிச் சென்ற செவிலியை இடைச்சுரத்து முக்கோற்பகவர் தெருட்டியது.

## IV

வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா
னிறுதிபோல்

வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலி
னலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம்;
இடைகொண்டு பொருள்வயி னிறத்திநீ யெனக்கேட்பி
னுடைபுநெஞ் சுகவாங்கே யொளியோடற் பாண்மன்னோ
படையமை சேக்கையுட் பாயலி னறியாய்நீ
புடைபெயர் வாயினும் புலம்புகொண் டினைபவள்;
முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ யெனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாண்மன்னோ
நனிகொண்ட சாயலா ணயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினுந் துறப்பஞ்சிக் கலுழ்பவள்;
பொருணோக்கிப் பிரிந்துநீ போகுதி யெனக்கேட்பின்
மருணோக்க மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாண்மன்னோ
விருணோக்க மிடையின்றி யீரத்தி னியன்றநின்
னருணோக்க மழியினு மவலங்கொண் டழிபவள்;
எனவாங்கு,
வினைவெஃகி நீசெலின் விடுமிவ ளுயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவே னெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனனாற் செறிகநின் வளையே.

துறை: தோழி தலைவனைச் செலவழுங்குவித்த செய்தியைத் தலைவிக்குச் சொல்லியது.

## V

அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்

புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண் ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான்
கேளினி;
அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்று ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு
முரைத்தனரே;
இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்று ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்று ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு
முரைத்தனரே;

எனவாங்கு,

இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.

துறை: பொருள்வயிற் பிரிந்த தலைவன் இடைச்சுரத்துக் கருப் பொருளின் நேயம் கண்டு கடுகிவருவான் எனத் தலைவி தோழிக்குக் கூறியது.

# 3. புறநானூறு

புறநானூறு எட்டுத்தொகை இலக்கியங்களில் ஒன்ருகும். எட்டுத்தொகையினை,

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
ருெத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தோ ரேத்தும் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

எனவரும் வெண்பாவால் அறிக. பாட்டு, அளவு, பொருள் என்ற மூவகையானும் தொகைபெற்றன எட்டுத்தொகை. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைத் தொகுத்துப் பண்டைத் தமிழ்ச்சான்ருேர் புறநானூறு எனப் பெயர் சூட்டினர். இந்நூல் ஆசிரியப்பாவால் அமைந்தது. சில பாக்கள் வஞ்சியடிகள் விரவியவை. சுட்டியொருவர் பெயர்கொளப்பெறின், அகத்திணையும், புறத்திணையாகக் கருதப்பெறும் என்ற விதிக்கேற்ப நக்கண்ணையாரின் கைக்கிளைப் பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. மூவேந்தருள் பலர் பாவேந்தராகவும் விளங்கினர் என்பதற்கும் புறநானூறு சான்று பகர்கிறது. இந்நூலின் பாக்கள் பலகாலத்துப் பலகுலத்துப் புலவராற் பாடப்பெற்றவையாகும். பெண்பாற் புலவர்கள் சிலரும் இடம்பெறுகின்றனர். கி. மு. 1000 — கி. பி. 300 வரை எழுந்த பாக்களை இந்நூலிற் காணலாம்.

புறநானூறு ஒரு வரலாற்றுக் கருவூலம் ஆகும். பண்டைத் தமிழகத்தை ஆண்ட முடியுடை வேந்தர், வேளிர், வள்ளல்கள், மறக்குடியினர் முதலியோர் வாழ்வியலை விளக்கும் வகையில், தமிழரின் வீரம், ஈகை, அரசியல் மாண்பு, கல்வி நிலை, கலைகள், நாகரிகம், பண்பாடு முதலிய வரலாற்றுக்கூறுகளைத் தெளிவாக இந்நூல் உணர்த்துகிறது. அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவரின் மேதக்க உள்ளம், வாய்மை, அஞ்சாது அறிவுரை பகரும் ஆற்றல், அமைதிக்குழைத்தல், வறுமையிற் செம்மை, தூயவாழ்வு முதலியனவும் புறநானூற்றிற் காண

லாம். வாழ்க்கையில் மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய உயரிய கொள்கைகளும் சிறந்த எண்ணங்களும் நீதிகளும் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.

இந்நூலிற்கு முற்றுப்பெறாத பழையவுரை ஒன்றுண்டு. பெரும்பான்மையும் புறப்பொருள் வெண்பாமாலை விதிகளை யொட்டியே திணை துறைகள் வகுக்கப்பெற்றிருத்தலின், இந்நூல் தொகுக்கப்பட்டதும், திணை துறைகள் வகுக்கப்பட்டதும் வெவ்வேறு காலங்களிலெனலாம். உரையாசிரியர்கள் பலரும் இந்நூலினை மேற்கோளாக ஆண்டுள்ளனர். சில பாடல்களை டாக்டர் ஜி. யூ. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

## 1

மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக
அறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

(புறம் 71)

திணை — காஞ்சி; துறை — வஞ்சினக் காஞ்சி.
ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் பாட்டு.

## 2

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

(புறம் 72)

திணையும் துறையும் அவை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு.

## 3

மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
ஈயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்

கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே!

(புறம் 73)

திணையும் துறையும் அவை.
சோழன் நலங்கிள்ளி பாட்டு.

## 4

குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.

(புறம் 74)

திணை — பொதுவியல்; துறை — முதுமொழிக் காஞ்சி.

சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானொடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு.

## 5

மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயி னாழ்நீர்

அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே.

(புறம் 75)

திணை — அது; துறை — பொருண்மொழிக்காஞ்சி.
சோழன் நலங்கிள்ளி பாட்டு.

## 6

விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ.

(புறம் 190)

திணை — பொதுவியல்; துறை — பொருண்மொழிக்காஞ்சி
சோழன் நல்லுருத்திரன் பாட்டு.

## 7

செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மறுஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே

குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
றொய்யா வுலகத்து நுகர்ச்சியும் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே.

(புறம் 214)

திணை — பொதுவியல்; துறை — பொருண்மொழிக்காஞ்சி
கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தான் சொற்றது.

## 8

கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர்க் கொளீஇ
ஆய்மக ளட்ட வம்புளி மிதவை
அவரை கொய்யுந ரார மாந்தும்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே.

(புறம். 215)

திணை — பாடாண்திணை; துறை — இயன்மொழி
கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் வாராரென்ற சான்றோர்க்கு அவர் வருவாரென்று சொல்லியது.

## 9

கேட்டன் மாத்திரை யல்ல தியாவதும்
காண்ட லில்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராகினும்

அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றையங் கொள்ளன்மி னாரறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே.

(புறம் 216)

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தான் பிசிராந்தையார்க்கு இடனொழிக்க வென்றது.

# 4. நாலடியார்

நாலடியார் பதினெண்கீழ்க் கணக்கினைச் சேர்ந்த நூலாகும்.

“நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு”

எனவரும் வெண்பா பதினெண்கீழ்க் கணக்கு நூல்களைத் தொகுத்துரைக்கும். நான்கடிகளை உடைய வெண்பாக்களான் அமைந்த விழுமிய நூலாதலின் நாலடியார் எனச் சிறப்பித்து வழங்கப்படுகிறது. நீதிக் கருத்துக்களை ஓதுதற்குச் செப்பலோசை உடைய வெண்பா யாப்பே ஏற்றதெனப் பண்டையோர் எண்ணினர். சமணச்சான்றோர் பலர் பாடிய நானூறு பாடல்களைப் பதுமனார் அதிகாரம், இயல், பால் எனப் பாகுபடுத்துத் தொகுத்து உரை வகுத்துள்ளார். திருக்குறள் நூல் அமைப்பினை ஒட்டியே அறம் பொருள் இன்பம் என முப்பாலாக நாலடியார் விளங்குகிறது. பல்லவர்க்குப் படைத்தலைவராய்த் திகழ்ந்த முத்தரையரைப் பற்றிய குறிப்பு இந்நூலில் இருத்தலான் இதன் காலம், கி. பி. 500-800 ஆதல் வேண்டும். தொல்காப்பியர் கூறும் எண்வகைச் செய்யுள் வனப்பில் ஒன்றாகிய அம்மைக்கு எடுத்துக்காட்டாக, இந்நூலினை உரையாசிரியர் மேற்கோள் காட்டுவர். இந்நூல் சமணக் கருத்துக்களுடன் தமிழகத்துப் பண்பு நலன்கள், நீதிக்கொள்கைகள், பழக்க வழக்கங்களையும் உணர்த்துகிறது. திருக்குறட் கருத்துக்கள் பல இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. அதனாற்றான்,

“ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி”

என்ற பாடல் எழுந்தது. கல்வி, குடிப்பிறப்பு என்ற இரண்டதிகாரங்கள் நும் பாடப் பகுதியில் உள்ளன.

## கல்வி

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. (க)

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக்—கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து. (உ)

களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக்—கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். (ங)

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர்—செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. (ச)
கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
ளுராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. (ரு)

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணு
யவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல். (சு)

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட்—குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி. (எ)

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமி லாளர் தொடர்பு. (அ)

கல்லாரே யாயினுங் கற்றுரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னொண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு. (கூ)

அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில். (கய)

## குடிப்பிறப்பு

உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற்—குன்று
ரிடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று. (க)

சான்றாண்மை சாய லொழுக்கமிவை மூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு. (உ)

இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்று வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்று வுணரற்பாற் றன்று. (ங)

நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு—மெல்லா
முணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னோ
புணரு மொருவர்க் கெனின். (ச)

கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச—மெல்லா
மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணுக் குடிப்பிறந் தார். (௫)

இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாங்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள. (௬)

செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி—லுடைத்தாகு
மெவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை. (௭)

ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போற்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். (௮)

செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுர ணாற்றுத லின்று. (௯)

எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ரற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத்—தூற்றுவ
ரற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும். (௧௰)

# 5. சிலப்பதிகாரம்

தமிழ்க் காப்பியங்களில் காலப் பழமையும் காப்பியச் சிறப்பும் மிகுந்தது சிலப்பதிகாரம். கதைத்தலைவன், தலைவியின் பெயரையே தம் பெயராகக் கொண்ட பிற காப்பியங்களைப் போலாது, கண்ணகி, கோப்பெருந்தேவி இவர்தம் சிலம்பு காரணமாகக் கதை நிகழ்ச்சி விரிவு பெறுதலின் இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர்பெற்றது. புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற முப்பெரும் பிரிவுகொண்ட இக்காப்பியம் 30 காதைகளான் அமைந்தது. கண்ணகி, கோவலன், மாதவி - இம்மூவர் வாழ்வினை மையமாகக் கொண்டு விளங்கும் இக்காப்பியம் பழந்தமிழரின் பண்பாடு, நாகரிகம், மூவேந்தரின் சிறப்பு, நகர அமைப்பு, கலைகள், பல்வேறு சமயங்கள், வாணிபம், அயல்நாட்டுத் தொடர்பு, வீரம், மான உணர்ச்சி முதலியவற்றை விளக்குகிறது. உலக இலக்கியங்களில் முதன்முதல் குடிமக்களைக் காப்பியத் தலைமக்களாகக் கொண்டு திகழ்வதும் இக்காப்பியமே. அரசியல் பிழைத்தோரை அறம் ஒறுக்கும், பத்தினியைப் பாரோர் பரவுவர், ஊழ்வினை கருத்தாவைத் தொடரும் என்ற பாவிகங்கள் இந்நூலில் வற்புறுத்தப் பட்டுள்ளன.

பதிகத்தில்,

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென"

எனவரும் பகுதி காண்க.

கற்பனை வளமும் கவிதை நயமும் ஓசை ஒழுங்கும் மிக்க இக்காப்பியம் பின்னர் எழுந்த காப்பியங்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் அமைந்துள்ளது. உரையிடையிட்ட பாட்டுடைச்

செய்யுளாய் ஒளிரும் இக்காப்பியத்தில் முத்தமிழ்க் கூறுகளும் மிளிரக் காண்கிறோம்.

இந்நூலின் ஆசிரியர் இளங்கோவடிகள் ஆவர். இவர் சேரன் செங்குட்டுவனின் இளவல். இவர் காலம் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு.

இந்நூலிற்கு அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் உண்டு. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் நூல் முழுமைக்கும் உரையெழுதியுள்ளார்.

## மதுரைக் காண்டம்

### ஆய்ச்சியர் குரவை

1 கயலெழுதிய விமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலிற்

காலை முரசங் கனைகுர லியம்புமாகலின்
நெய்ம்முறை நமக்கின் றாமென்
றையைதன் மகளைக் கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமுதுமகள் வந்துதோன்றுமன்.

### உரைப்பாட்டு மடை

2 குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு;
3 உறிநறு வெண்ணெ யுருகா வுருகும்
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு;
4 நான்முலை யாய நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு.

## கருப்பம்

5 குடத்துப்பா லுறையாமையும் குவியிமிலேற்றின் மடக் கண்ணீர் சோர்தலும் உறியில்வெண்ணெ யுருகாமையும் மறிமுடங்கி யாடாமையும் மான்மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளை நோக்கி மன மயங்காதே மண்ணின் மாதர்க் கணியாகிய கண்ணகியுந் தான்காண ஆயர்பாடியி லெரு மன்றத்து மாயவனுடன் தம்முனாடிய வால சரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குரவையாடுதும் யாமென்றாள் கறவை கன்று துயர்நீங்குக வெனவே.

## கொளு

6 காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள், சுட்டு; (க)

7 நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதரா டோள்; (உ)

8 மல்லன் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் பூங்குழ றான்; (௩)

9 நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிப்
பெண்கொடி மாதர்தன் றோள்; (௪)

10 பொற்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிந்
நற்கொடி மென்முலை தான்; (௫)

11 வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள்; (௬)

12 தூநிற வெள்ளை யடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமல ராள். (௭)

## எடுத்துக்காட்டு

13 ஆங்கு,
தொழுவிடை யேறு குறித்து வளர்த்தார்
எழுவரிளங் கோதையார்
என்றுதன் மகளைநோக்கித்

தொன்றுபடு முறையானிறுத்தி
இடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் பெயரிடுவாள்
குடமுத லிடமுறை யாக்குர றுத்தம்
கைக்கிளை யுழையிளி விளரி தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே.

14 மாயவ னென்றாள் குரலை விறல்வெள்ளை
ஆயவ னென்றா ளிளிதன்னை — யாய்மகள்
பின்னையா மென்றாளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையா மென்றாண் முறை;

15 மாயவன் சீருளார் பிஞ்ஞையுந் தாரமும்
வால்வெள்ளை சீரா ருழையும் விளரியும்
கைக்கிளை பிஞ்ஞை யிடத்தாள் வலத்துளாள்
முத்தைக்கு நல்விளரி தான்;

16 அவருள், வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதா னுள்படுவாள் — கொண்டசீர்
வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்
பெய்வளைக் கையாணம் பின்னைதா னாமென்றே
ஐயென்றா ளாயர் மகள்.

## கூத்துள்படுதல்

17 அவர்தாம், செந்நிலைமண்டிலத்தாற் கற்கடகக் கைகோஒத்
தந்நிலையே யாடற்சீ ராய்ந்துளார் — முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற் பாடுதும்
முல்லைத்தீம் பாணியென் றாள்.

18 எனாக்,
குரன்மந்த மாக விளிசம னாக
வரன்முறையே துத்தம் வலியா—உரனிலா
மந்தம் விளரி பிடிப்பா ளவணட்பின்
பின்றையைப் பாட்டெடுப் பாள்.

## பாட்டு

19 கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ. (௧)
20 பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ. (௨)
21 கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ; (௩)
22 தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை
அணிநிறம் பாடுகேம் யாம்.
23 இறுமென் சாய னுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்
அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம். (௧)
24 வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம். (௨)
25 தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாம்
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம். (௩)

## ஒன்றன் பகுதி

26 கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தம்முனோன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தற் பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தைமுறை நரம்புளர்வார்.

27 மயிலெருத் துறழ்மேனி மாயவன் வலத்துளாள்
பயிலிதழ் மலர்மேனித் தம்முனோ னிடத்துளாள்
கயிலெருத்தங் கோட்டியநம் பின்னைசீர்
புறங்காப்பார்
குயிலுவரு ளாரதனுர் கொளைபுணர்சீர்
நரம்புளர்வார்.

## ஆடுநர்ப்புகழ்தல்

28 மாயவன்றம் முன்னினொடும் வரிவளைக்கைப்
பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை
புறஞ்சோர
ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார்
தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே.
எல்லா நாம்,
புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்வரிப் பாணியொன் றுற்று.

## உள்வரி வாழ்த்து

29 கோவா மலையாரங் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா
னென்பரால். (க)
30 பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து
மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா
னென்பரால். (உ)

31 முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிரே ளோச்சிக் கடல்கடைந்தா
னென்பரால். (௩)

## முன்னிலைப்பரவல்

32 வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு
கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற்
கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ
மருட்கைத்தே. (க)
33 அறுபொரு ளிவனென்றே யமரர்கணந்
தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினு னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ
மருட்கைத்தே. (உ)
34 திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ
மருட்கைத்தே. (௩)

## படர்க்கைப்பரவல்

35 மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை
கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே

திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

36 பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன
கண்ணே.

37 மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே.

38 என்றியாம்
கோத்த குரவையு ளேத்திய தெய்வநம்
ஆத்தலைப் பட்ட துயர்தீர்க்க வேத்தர்
மருள வைகல் வைகன் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்
திடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடித்தோட் டென்னவன் கடிப்பிகு முரசே.

## துன்பமாலை

ஆங்கு,
ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள் மேவிக்
குரவை முடிவிலோ ரூரரவங் கேட்டு
விரைவொடு வந்தா ளுளள்
அவடான்,
சொல்லாடாள் சொல்லாடா நின்றாளந் நங்கைக்குச்
சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்
எல்லாவோ,

காதலற் க்ாண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே
ஊதுலை தோற்கவு யிர்க்குமென் னெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ
நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்
அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சன்றே
அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன்வாழி யோதோழீ
தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சாயின்
எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ
சொன்னது :—
அரைசுறை கோயி லணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
குரைகழன் மாக்கள் கொலைகுறித் தனரே
எனக்கேட்டு,
பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
எங்கணா அ வென்னா விளைந்தேங்கி மாழ்குவாள்
இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யா னவலங்கொண் டழிவலோ
நறைமலி வியன்மார்பி னண்பனை யிழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோன் மன்னவன் றவறிழைப்ப
அறனெனு மடவோயா னவலங்கொண் டழிவலோ
தம்முறு பெருங்கணவன் றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்
போல்

செம்மையி னிகந்தகோற் றென்னவன் றவறிழைப்ப
இம்மையு மிசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ காணிகா,
வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளி ரெல்லீருங் கேட்டீமின்
ஆய மடமகளி ரெல்லீருங் கேட்டைக்க
பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ வென்கணவன்
கள்வனோ வல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்.

## ஊர்சூழ்வரி

என்றனன் வெய்யோ னிலங்கீர் வளைத்தோளி
நின்றில ணின்ற சிலம்பொன்று கையேந்தி
முறையி லரசன்ற னூரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்கா ளீதொன்று
பட்டேன் படாத துயரம் படுகாலை
உற்றே னுறாத துறுவனே யீதொன்று
கள்வனோ வல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே யீதொன்று
மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே யீதொன்று
காதற் கணவனைக் கண்டா லவன்வாயில்
தீதறு நல்லுரை கேட்பனே யீதொன்று
தீதறு நல்லுரை கேளா தொழிவனேல்
நோதக்க செய்தாளென் றெள்ள லிதுவொன்றென்
றல்லலுற் றாற்றா தழுவாளைக் கண்டேங்கி
மல்லன் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்
மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்

தென்னவன் கொற்றஞ் சிதைந்த திதுவென்கொல்
மண்குளிரச் செய்யு மறவே னெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல்
செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட் டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல்
ஐயரி யுண்கணழு தேங்கி யரற்றுவாள்
தெய்வமுற்றாள் போலுந் தகைய ளிதுவென்கொல்
என்பன சொல்லி யினைந்தேங்கி யாற்றவும்
வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக்
கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணான்
மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற்
செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் றொலிபடைத்த தூர்
வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணாக் கடுந்துயரம்
என்னுறு துயர்கண்டு மிடருறு மிவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை யறியாதேற்
கென்னுறு வினைகாணா விதுவென வுரையாரோ
யாருமின் மருண்மாலை யிடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பந் தரைமூழ்கிக் கிடப்பதோ
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் றவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா விதுவென வுரையாரோ
கண்பொழி புனல்சோருங் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ
மன்பதை பழிதூற்ற மன்னவன் றவறிழைப்ப

உண்பதோர் வினைகாணு விதுவென வுரையாரோ
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுந ருறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
தெய்வமு முண்டுகொ றெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமு முண்டுகொ றெய்வமு முண்டுகொல்
என்றிவை சொல்லி யழுவாள் கணவன்றன்
பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்று னெழுந்து நிறைமதி வாண்முகம்
கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற
அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையா டன்கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கையாற் பற்றப்
பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்
எழுதெழின் மலருண்க ணிருந்தைக்க வெனப்போனன்
மாயங்கொன் மற்றென்கொன் மருட்டியதோர் தெய்வங்கொல்
போயெங்கு நாடுகேன் பொருளுரையோ விதுவன்று
காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றாள்
என்று ளெழுந்தா ளிடருற்ற தீக்கனு
நின்று ணினைந்தா னெடுங்கயற்க ணீர்சோர
நின்று ணினைந்தா னெடுங்கயற்க ணீர்துடையாச்
சென்று ளரசன் செழுங்கோயில் வாயின்முன்.

# 6. சீவகசிந்தாமணி

சங்கப் பாடல்களுக்குப்பின் பொருட்டொடர் நிலைச் செய்யுள் எனப்படும் காப்பியங்கள் எழுந்தன. இவற்றுள் சிறந்த ஐந்தினை ஐம்பெருங்காப்பியம் என வழங்கும் மரபு மயிலைநாதர் காலத்திற்கு முன்பே வந்தது. இவை சமண பௌத்தச் சார்புடையவை. அகவற்பாவால் காப்பியம் பாடும் பழைய நிலையினை மாற்றிப் புதுப்புதுப் பாவினங்களைப் படைத்துப் பயன்படுத்திக் காப்பியக் கோயிலைக் கட்டியவர் திருத்தக்கதேவர். இவர் நரிவிருத்தம் பாடித் தம் புலமைத் திறனை நல்லாசிரியரின் முன் நாட்டினர் என்ப. திருத்தக்க தேவர் சோழ குலத்தினர்; தென்மொழி, வடமொழி, பாகதம் ஆகிய மொழிப் புலமையும் ஆடல், பாடல், மருத்துவம், வானநூல், மந்திரம் முதலிய பல்கலைத் திறனும், பாவினம் படைக்கும் யாப்புத் திறனும் இயற்கையில் ஈடுபாடும், கற்பனை வளமும் நிரம்பிய காப்பியக் கவிஞர் ஆவர். இவர் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி; கி. பி. 6-ஆம் நூற்றாண்டு என்பாரும் உளர்.

சீவகசிந்தாமணி சீவகனாகிய சிந்தாமணியைப் பற்றிய நூல் என விரிதலின் பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம். வளர்ப்புப் பெற்றோர் சீவகன் எனப் பெயர் சூட்டுமுன், ''சிந்தாமணியே கிடத்தியால்'' என ஈன்ற தாய் விசையை விளித்தலான் சிந்தாமணி என்பது சீவகர்க்கு ஒருபெயர் எனலாம். ''சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்'' என வரும் கவிக்குறிப்பும் காண்க. சிந்தித்தன எல்லாம் நல்கும் விண்ணகமணி போல் கற்பார் கருதும் ஒன்பான் சுவையும் ஒருங்கு பயத்தலின் சிந்தாமணி என்பது தன்மையால் வந்த பெயர் என்ப. சீவகன் காந்தருவதத்தை முதல் எண்மரை மணத்தலும் நாமகள், மண்மகள், பூமகள், முத்திமகள் என்னும் நால்வரை மருவலும், தன்றோழன் பதுமுகன் கோவிந்தையை மணத்தலும் எனப் பதின்மூன்று மணங்களும் இந்நூலின் 13 இலம்பகங்களிலும் பரக்கப் பேசப்படுதலின், மணநூல் என்ற பெயரும் இந்நூலிற்கு உண்டு. வட

மொழியில் வழங்கும் க்ஷத்திரிய சூடாமணி, கத்திய சிந்தாமணி முதலியன இதற்கு முதல்நூலாகும். பிற்காலக் காப்பியங்களுக் கெல்லாம் வழிகாட்டியாய் சிந்தாமணி விளங்குகிறது. இந் நூலிற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளனர்.

## நாமகளிலம்பகம்

### சச்சந்தன் பண்புநலன்

நச்சு நாகத்தி னூரழற் சீற்றத்தன்
அச்ச முற்றடைந் தார்க்கமிர் தன்னவன்
கச்சு லாமுலை யார்க்கணங் காகிய
சச்சந் தன்னெனுந் தாமரைச் செங்கணான். 1

வண்கை யாற்கலி மாற்றிவை வேலினாற்
றிண்டி றற்றெவ்வர் தேர்த்தொகை மாற்றினான்
நுண்க லைக்கிட னாய்த்திரு மாமகள்
கண்க ளுக்கிட னாங்கடி மார்பனே. 2

கோதை நித்திலஞ் சூழ்குளிர் வெண்குடை
ஓத நீருல கொப்ப நிழற்றலாற்
றாதை யேயவன் றாணிழற் றங்கிய
காத லாற்களிக் கின்றதிவ் வையமே. 3

தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
அருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திரும கன்றிரு மாநில மன்னனே. 4

ஏனை மன்னர்த மின்னுயிர் செற்றவேற்
றானை மன்னரிற் றானிமி லேறனான்
தேனை மாரியன் னான்றிசை காவலன்
வானந் தோய்புக ழான்மலி வெய்தினான். 5

## விசயையை மணத்தல்

செல்வற் கின்னணஞ் சேறலிற் றீம்புனல்
மல்கு நீர்விதை யத்தர சன்மகள்
அல்லி சேரணங் கிற்கணங் கன்னவள்
வில்லி னீள்புரு வத்தெறி வேற்கணாள். 6

உருவுஞ் சாயலு மொப்ப வுரைப்பதற்
கரிய வாயினு மவ்வளைத் தோளிகட்
பெருகு காரிகை பேசுவல் பெண்ணணங்
கரிய தேவரு மேத்தரு நீரளே. 7

மருமகன் வலந்தது மங்கை யாக்கமும்
அருமதிச் சூழ்ச்சியி னமைச்ச ரெண்ணிய
கருமமுங் கண்டவர் கலத்தற் பான்மையிற்
பெருமகற் சேர்த்தினார் பிணைய னாளையே. 8

(வேறு)

பொனங்கொடி யயிர்த னாளும் பொன்னெடுங் குன்ற னாளும்
அனங்கனுக் கிலக்க மாகி யம்புகொண் டழுத்த விள்ளார்
இனந்தமக் கெங்கு மில்லா ரியைந்தன ரென்ப முக்கட்
சினந்திகழ் விடையி னானுஞ் செல்வியுஞ் சேர்ந்த
தொத்தே. 9

## காவலரின் காமக்களி

(வேறு)

மண்ணகங் காவலின் வழுக்கி மன்னவன்
பெண்ணருங் கலத்தொடு பிணைந்த பேரருள்
விண்ணக மிருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற வுரோணியோ டொளித்த தொத்ததே. 10

(வேறு)

குங்குமத் தோளி னானுங் கொழுங்கயற் கண்ணி னாளும்
தங்கிய காதல் வெள்ளந் தணப்பறப் பருகு நாளுட்
டிங்கள்வெண் குடையி னாற்குத் திருவிழுக் குற்ற வண்ணம்
பைங்கதிர் மதியிற் றெள்ளிப் பகர்ந்தெடுத் துரைத்து
மன்றே. 11

## கட்டியங்காரனிடம் காவற் கடமை வழங்குதல்

களிறனு னமைச்சர் தம்முட் கட்டியங் கார னென்பான்
ஒளிறுவாட் டடக்கை யானுக் குயிரென வொழுகு நாளுட்
பிளிறுவார் முரசிற் சாற்றிப் பெருஞ்சிறப் பியற்றி வேந்தன்
வெளிறிலாக் கேள்வி யானை வேறுகொண் டிருந்து
சொன்னான். 12

அசைவிலாப் புரவி வெள்ளத் தரிஞ்சயன் குலத்துட் டோன்றி
வசையிலாள் வரத்தின் வந்தாள் வான்சுவை யமிர்த மன்னாள்
விசையையைப் பிரித லாற்றேன் வேந்தனீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டு மிலங்குபூண் மார்பவென்றான். 13

அண்ணரு னுரைப்பக் கேட்டே யடுகளிற் றெருத்தி னிட்ட
வண்ணப்பூந் தவிசு தன்னை ஞமலிமே லிட்ட தொக்கும்
கண்ணகன் ஞாலங் காத்த லெனக்கெனக் கமழுங் கண்ணி
மண்ணகம் வளருந் தோளான் மறுத்துநீ மொழிய லென்றான். 14

எழுதரு பருதி மார்ப னிற்றென விசைத்த லோடும்
தொழுதடி பணிந்து சொல்லுந் துன்னலர்த் தொலைத்த
வேலோய்
கழிபெருங் காத லாள்கட் கழிநலம் பெறுக வையம்
பழிபடா வகையிற் காக்கும் படுநுகம் பூண்ப லென்றான். 15

## நிமித்திகன் இடித்துரை

வலம்புரி பொறித்த வண்கை மதவலி விடுப்ப வேகிக்
கலந்தனன் சேனை காவல் கட்டியங் கார னென்ன
உலந்தரு தோளினாய்நீ யொருவன் மேற் கொற்றம்
வைப்பின்
நிலந்திரு நீங்குமென்றோர் நிமித்திக னறியிற்
சொன்னான். 16

எனக்குயி ரென்னப் பட்டா னென்னலாற் பிறரை யில்லான்
முனைத்திற முருக்கி முன்னே மொய்யமர் பலவும் வென்றான்
தனக்கியான் செய்வசெய் தேன்றான் செய்வ செய்க வொன்றும்
மனக்கினா மொழிய வேண்டா வாழிய ரொழிக வென்றான். 17

காவல குறிப்பன் றேனுங் கருமமீ தருளிக் கேண்மோ
நாவலர் சொற்கொண் டார்க்கு நன்கலாற் றீங்கு வாரா
பூவலர் கொடிய ஞர்கட் போகமே கழுமி மேலும்
பாவமும் பழியு முற்ருர் பற்பலர் கேளி தென்ருன். 18

பெரும்பெயர்ப் பிரம னென்னும் பீடுறைற் பெரிய நீரான்
அரும்பிய முலையி ஞளுக் கணிமுக நான்கு தோன்ற
விரும்பியாங் கவளை யெய்தான் விண்ணக மிழந்த தன்றித்
திருந்திறைற் கின்று காறுஞ் சிறுசொல்லாய் நின்ற
தன்றே. 19

கைம்மலர்க் காந்தள் வேலிக் கணமலை யரையன் மங்கை
மைம்மலர்க் கோதை பாகங் கொண்டதே மறுவ தாகக்
கொய்ம்மலர்க் கொன்றை மாலைக் குளிர்மதிக் கண்ணி
யாற்குப்
பெய்ம்மல ரலங்கன் மார்ப பெரும்பழி யாயிற் றன்றே. 20

நீனிற வண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் ரெழுனை யாற்றுட்
கோனிற வளையி ஞர்க்குக் குருந்தவ ஞெசித்த தென்ருன். 21

காமமே கன்றி நின்ற கழுதைகண் டருளி ஞலே
வாமனுர் சென்று கூடி வருந்தினீ ரென்று வையத்
தீமஞ்சேர் மாலை போல விழித்திடப் பட்ட தன்றே
நாமவேற் றடக்கை வேந்தே நாமிது தெரியி
னென்ருன். 22

படுபழி மறைக்க லாமோ பஞ்சவ ரன்று பெற்ற
வடுவுரை யாவர் பேர்ப்பார் வாய்ப்பறை யறைந்து தூற்றி
இடுவதே யன்றிப் பின்னு மிழுக்குடைத் தம்ம காமம்
நடுவுநின் றுலக மோம்ப னல்லதே போலு மென்ருன். 23

## உருத்திரதத்தனின் அறிவுரை

ஆரறி விகழ்தல் செல்லா வாயிரஞ் சொங்க ணனும்
கூரறி வுடைய நீரார் சொற்பொருள் கொண்டு செல்லும்
பேரறி வுடையை நீயும் பிணையனுட் கவலஞ் செய்யும்
ஓரறி வுடையை யென்று னுருத்திர தத்த னென்பான். 24

## சச்சந்தனின் விடாப்பிடி

அளந்துதாங் கொண்டு காத்த வருந்தவ முடைய நீரார்க்
களந்தன போக மெல்லா மவரவர்க் கற்றை நாளே
அளந்தன வாழு நாளு மதுவெனக் குரைய லென்றுன்
விளங்கொளி மணிகள் வேய்ந்து விடுசுட ரிமைக்கும்
பூணுன். 25

மூரித்தேந் தாரி னுய்நீ முனியினு முறுதி நோக்கிப்
பாரித்தேன் றரும நுண்ணூல் வழக்கது வாதல் கண்டே
வேரித்தேங் கோதை மாதர் விருந்துனக் காக வின்பம்
பூரித்தேந் திளைய கொங்கை புணர்கயான் போவ
லென்றுன். 26

## சச்சந்தனின் சல்லாபம்

(வேறு)

இனமா மென்றுரைப் பினுமே தமெனுன்
முனமா கியபான் மைமுளைத் தெழலாற்
புனமா மலர்வேய் நறும்பூங் குழலாள்
மனமா நெறியோ டியமன் னவனே. 27

கலையார் துகிலேந் தல்குலுங் கதிர்சூழ்
முலையார் தடமும் முனியா துபடிந்
துலையாத் திருவின் னமிர்துண் டொளிசேர்
மலையார் மணிமார் பன்மகிழ்ந் தனனே. 28

விரிமா மணிமா லைவிளங் குமுடித்
திருமா மணிசிந் துதிளைப் பினராய்
எரிமா மணிமார் பனுமேந் திழையும்
அருமா மணிநா கரிஞு யினரே. 29

## விசயையின் கனவு

நறவார்ந் தசெதார்நா கிளந்தா மரைவாய்
உறவீழ்ந் தசெதாரொண் மணிபோன் றுரவோன்
அறவாக் கியவின் பமமர்ந் தவிருட்
கறைவேற் கணிஞுள் கனவுற் றனளே. 30

பஞ்சி யடிப்பவ ளத்துவர் வாயவள்
துஞ்சு மிடைக்கன மூன்றவை தோன்றலின்
அஞ்சி நடுங்கின ளாயிழை யாயிடை
வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே. 31

பண்கெழு மெல்விர லாற்பணைத் தோளிதன்
கண்கழூஉச் செய்து கலைநல தாங்கி
விண்பொழி பூமழை வெல்கதிர் நேமிய
வண்புகழ் மாலடி வந்தனை செய்தாள். 32

இம்பரி லாநறும் பூவொடு சாந்துகொண்
டெம்பெரு மானடிக் கெய்துகென் றேத்தி
வெம்பரி மானெடுந் தேர்மிகு தானையத்
தம்பெரு மானடி சார்ந்தன ளன்றே. 33

தானமர் காதலி தன்னொடு மாவலி
வானவர் போன்மகிழ் வுற்றபின் வார்நறுந்
தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றெனக்
கானமர் கோதை கனமொழி கின்றாள். 34

தொத்தணி பிண்டி தொலைந்தற வீழ்ந்ததெண்
முத்தணி மாலை முடிக்கிட னாக
ஒத்ததன் றாள்வழி யேமுளை யோங்குபு
வைத்தது போல வளர்ந்ததை யன்றே. 35

## கனவின் பயன் கூறல்

வார்குழை வில்லிட மாமுடி தூக்குபு
கார்கெழு குன்றனை யான்கன வின்னியல்
பார்கெழு நூல்விதி யாற்பயன் முன்றெரிந்
தேர்குழை யாம லெடுத்துரைக் கின்றான். 36

நன்முடி நின்மக னுநறு மாலைகள்
அன்னவ னுலம ரப்படுந் தேவியர்
நன்முளை நின்மக னுக்கம தாமெனப்
பின்னத னுற்பயன் பேசலன் விட்டான். 37

இற்றத னுற்பய னென்னென வேந்திழை
உற்றதின் னேயிடை யூறெனக் கென்றலும்
மற்றுரை யாடல னாய்மணி மாநிலத்
தற்றதொர் கோதையிற் பொற்றொடி சோர்ந்தாள். 38

## விசயையின் மனத்துயர் துடைத்தல்

காவி கடந்தகண் ணீரொடு காரிகை
ஆவி நடந்தது போன்றணி மாழ்கப்
பாவியெ னுவிவ ருத்துதி யோவெனத்
தேவியை யாண்டகை சென்றுமெய் சார்ந்தான். 39

தண்மலர் மார்புற வேதழீயி னுனவள்
கண்மலர்த் தாள்கன வின்னியன் மெய்யெனும்
பெண்மய மோபெரி தேமட வாய்க்கெனப்
பண்ணுரை யாற்பர வித்துயர் தீர்த்தான். 40

காதலன் காதலி னுற்களித் தாய்மலர்க்
கோதையங் கொம்பனை யார்தங் குழாந்தொழத்
தாதுகு தாமம ணிந்தகில் விம்மிய
போதுகு மெல்லணைப் பூமகள் சேர்ந்தாள். 41

## திருவயிறு வாய்த்தல்

பண்கனி யப்பரு கிப்பய னுடகம்
கண்கனி யக்கவர்ந் துண்டுசின் னுள்செல
விண்கனி யக்கவின் வித்திய வேற்கணி
மண்கனிப் பான்வள ரத்தளர் கின்ருள். 42

(வேறு)

கரும்பார்தோண் முத்தங்கழன்று செவ்வாய் விளர்த்துக்கண்
பசலைபூத்தகாமம்
விரும்பார் முலைக்கண் கரிந்துதிங்கள் வெண்கதிர்கள்
பெய்திருந்த பொற்செப்பே போல்
அரும்பால் பரந்து நுசுப்புங் கண்ணின் புலனுயிற்ருய்ந்த
வனிச்சமாலை
பெரும்பாரமாய்ப் பெரிதுநைந்துநற் சூற்சலஞ்சலம்
போனங்கை நலந்தொலைந்ததே. 43

## விசயையைக்காக்க வேந்தனுக்குக் கட்டளை

(வேறு)

தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோற்
றேம்புடை யலங்கன் மார்பிற் றிருமகன் றமிய னுக
ஓம்படை யொன்றுஞ் செப்பா டிருமக ளொளித்து நீங்க
ஆம்புடை தெரிந்து வேந்தற் கறிவெனு மமைச்சன்
சொன்னுன். 44

காதிவேன் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப் பட்ட
நீதிமேற் சேற றேற்ருய் நெறியலா நெறியைச் சேர்ந்து
கோதியல் காம மென்னு மதுவினிற் குளித்த ஞான்றே
ஓதிய பொறியற் ருயோ ரரும்பொறி புனைவி யென்ருன். 45

## மயிற்பொறியின் மாண்பு

(வேறு)

அந்தரத் தார்மய னேயென வையுறும்
தந்திரத் தாற்றம நூல்கரை கண்டவன்

வெந்திற லான்பெருந் தச்சனைக் கூவியோர்
எந்திர வூர்தி யியற்றுமி னென்றான். 46

பல்கிழி யும்பயி னுந்துகி னூலொடு
நல்லரக் கும்மெழு குந்நலஞ் சான்றன
அல்லன வும்மமைத் தாங்கெழு நாளிடைச்
செல்வதோர் மாமயில் செய்தன னன்றே. 47

பீலிநன் மாமயி லும்பிறி தாக்கிய
கோலநன் மாமயி லுங்கொடு சென்றவன்
ஞாலமெல் லாமுடை யானடி கைதொழு
தாலுமிம் மஞ்ஞைய றிந்தரு ளென்றான். 48

## ஊர்தி புனைந்தோன் பரிசுபெறல்

நன்னெறி நூனயந் தானன்று நன்றிது
கொன்னெறி யிற்பெரி யாயிது கொள்கென
மின்னெறி பல்கல மேதகப் பெய்ததோர்
பொன்னறை தான்கொடுத் தான்புகழ்
வெய்யோன். 49

## விசயை ஊர்தியை இயக்கிப்பழகுதல்

ஆடியல் மாமயி லூர்தியை யவ்வழி
மாடமுங் காவும டுத்தோர்சின் னாள்செலப்
பாடலின் மேன்மேற் பயப்பயத் தான்றுரந்
தோடமு றுக்கியு ணர்த்தவு ணர்ந்தாள். 50

(வேறு)

பண்டவழ் விரலிற் பாவை பொறிவலந் திரிப்பப் பொங்கி
விண்டவழ் மேகம் போழ்ந்து விசும்பிடைப் பறக்கும் வெய்ய
புண்டவழ் வேற்கட் பாவை பொறியிடந் திரிப்பத் தோகை
கண்டவர் மருள வீழ்ந்து கால்குவித் திருக்கு மன்றே. 51

## கட்டியங்காரன் அறிஞரை உசாவுதல்
(வேறு)

காதி வேல்வல கட்டியங் காரனும்
நீதி யானிலங் கொண்டபி னீதிநூல்
ஓதி னார்தமை வேறுகொண் டோதினன்
கோது செய்குணக் கோதினுட் கோதனன். 52

மன்ன வன்பகை யாயதொர் மாதெய்வம்
என்னை வத்திடங் கொண்டஃ திராப்பகற்
றுன்னி நின்று செகுத்திடு நீயெனும்
என்னை யான்செய்வ கூறுமி னென்னவே. 53

## தருமதத்தன் சாற்றிய நீதிகள்

அருமை மாமணி நாக மழுங்கவோர்
உருமு வீழ்ந்தெந வுட்கின ராவவன்
கருமங் காழ்த்தமை கண்டவர் தம்முளான்
தரும தத்தனென் பானிது சாற்றினன். 54

தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடிக்
குவளை யேயள வுள்ள கொழுங்கணாள்
அவளை யேயமிர் தாகவவ் வண்ணலும்
உவள கந்தன தாகவொ டுங்கினன். 55

விண்ணி னோடமிர் தம்விலைச் செல்வது
பெண்ணின் னின்பம் பெரிதெனத் தாழ்ந்தவன்
எண்ண மின்றி யிறங்கியிவ் வையகம்
தண்ணந் தாமரை யாளொடுந் தாழ்ந்ததே. 56

தன்னை யாக்கிய தார்ப்பொலி வேந்தனைப்
பின்னை வெளவிற் பிறழ்ந்திடும் பூமகள்
அன்ன வன்வழிச் செல்லினிம் மண்மிசைப்
பின்னைத் தன்குலம் பேர்க்குந ரில்லையே. 57

திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்க ளொப்பவென் றோதுப
குலவு தார்மன்னர்க் கியானிது கூறுவன்
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திவர். 58

அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ. 59

உறங்கு மாயினு மன்னவன் றன்றொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்
தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார். 60

யாவ ராயினு நால்வரைப் பின்னிடிற்
றேவ ரென்பது தேறுமிவ் வையகம்
காவன் மன்னவர் காய்வன சிந்தியார்
நாவி னும்முரை யார்நவை யஞ்சுவார். 61

தீண்டி னார்தமைத் தீச்சுடு மன்னர்தீ
ஈண்டு தங்கிளை யோடு மெரித்திடும்
வேண்டி லின்னமிர் துந்நஞ்சு மாதலான்
மாண்ட தன்றுநின் வாய்மொழித் தெய்வமே. 62

வேலின் மன்னனை விண்ணகங் காட்டியிஞ்
ஞால மாள்வது நன்றெனக் கென்றியேல்
வாலி தன்றெனக் கூறினன் வாண்ணுமற்
கோலை வைத்தன்ன வொண்டிற லாற்றலான். 63

(வேறு)

குழற்சிகைக் கோதை சூட்டிக் கொண்டவ னிருப்ப மற்றோர்
நிழற்றிகழ் வேலி னானை நேடிய நெடுங்க ணாளும்
பிழைப்பிலாட் புறந்தந் தானுங் குரவரைப் பேணல் செய்யா
திழுக்கினு ரிவர்கள் கண்டா யிடும்பைநோய்க் கிரைகளாவார் 64

நட்பிடைக் குய்யம் வைத்தான் பிறர்மனை நலத்தைச் சேர்ந்தான்
கட்டழற் காமத் தீயிற் கன்னியைக் கலக்கி னானும்
அட்டுயி ருடலந் தின்றா னமைச்சனா யரசு கொன்றான்
குட்டநோய் நரகந் தம்முட் குளிப்பவ ரிவர்கள் கண்டாய். 65

பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னாட்
குறைபடு மதியந் தேயக் குறுமுய றேய்வ தேபோல்
இறைவனாத் தன்னை யாக்கி யவன்வழி யொழுகி னென்றும்
நிறைமதி யிருளைப் போழு நெடும்புகழ் விளைக்கு மென்றான். 66

கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி
ஆணையிவ் வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான். 67

## மதனனின் மறுப்புரை

தார்ப்பொலி தரும தத்தன் றக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன் னகல மெல்லாம் பொள்ளென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடன் மகரப் பேழ்வாய் மதனன் மற்றிதனைச் சொன்னான். 63

தோளினால் வலிய ராகித் தொக்கவர் தலைகள் பாற
வாளினாற் பேச லல்லால் வாயினாற் பேச றேற்றேன்
காளமே கங்கள் சொல்லிக் கருணையாற் குழைக்குங் கைகள்
வாளமர் நீந்தும் போழ்தின் வழுவழுத் தொழியு மென்றான். 69

## கட்டியங்காரனின் சூளுரை

நுண்முத்த மேற்றியாங்கு மெய்யெலாம் வியர்த்துநொய்தின்
வண்முத்த நிரைகொ ணெற்றி வார்முரி புருவ மாக்கிக்

கண்ணெரி தவழ வண்கை மணிநகு கடக மெற்று
வெண்ணகை வெகுண்டு நக்குக்கட்டி யங்காரன்
சொன்னான். 70

என்னலாற் பிறர்கள் யாரே யின்னவை பொறுக்கு நீரார்
உன்னலாற் பிறர்கள் யாரே யுற்றவற் குறுத சூழ்வார்
மன்னன்போய்த் துறக்க மாண்டு வானவர்க் கிறைவ னாக
பொன்னெலாம் விளைந்து பூமி பொலியயான் காப்ப
லென்றான். 71

விளைக பொலிக வஃதே யுரைத்திலம் வெகுள வேண்டா
களைக மெழுக மின்னே காவலற் கூற்றங் கொல்லும்
வளைகய மடந்தை கொல்லுந் தான்செய்த பிழைப்புக்
கொல்லும்
அளவறு நிதியங் கொல்லு மருள்கொல்லு மமைக
வென்றான். 72

## கட்டியங்காரனின் சூழ்ச்சி

நிலத்தலைத் திருவ னுடை னீப்பருங் காதல் கூர
முலைத்தலைப் போக மூழ்கி முகிழ்நிலா முடிகொள் சென்னி
வெலற்கருந் தானை நீத்த வேந்தனை வெறுமை நோக்கிக்
குலத்தொடுங் கோற லெண்ணிக் கொடியவன் கடிய
சூழ்ந்தான். 73

கோன்றமர் நிகள மூழ்கிக் கோட்டத்துக் குரங்கத் தன்கீழ்
ஏன்றநன் மாந்தர்க் கெல்லா மிருநிதி முகந்து நல்கி
ஊன்றிய நாட்டை யெல்லா மொருகுடை நீழல் செய்து
தோன்றினான் குன்றத் துச்சிச் சுடர்ப்பழி விளக்கிட்
டன்றே. 74

## கட்டியங்காரன் சச்சந்தனை முற்றுதல்

பருமித்த களிறு மாவும் பரந்திய றேரும் பண்ணித்
திருமிக்க சேனை மூதூர்த் தெருவுதொ றெங்கு மீண்டி
எரிமொய்த்த வாளும் வில்லும் மிலங்கிலை வேலு மேந்திச்
செருமிக்க வேலி னான்றன் றிருநகர் வளைந்த தன்றே. 75

நீணில மன்ன போற்றி நெடுமுடிக் குருசில் போற்றி
பூணணி மார்ப போற்றி புண்ணிய வேந்தே போற்றி
கோணிலைக் குறித்து வந்தான் கட்டியங் கார னென்று
சேணிலத் திறைஞ்சிச் சொன்னான் செய்யகோல் வெய்ய
சொல்லான். 76

## சச்சந்தன் ஆணையும் சூளுரையும்

திண்ணிலைக் கதவ மெல்லாந் திருந்துதா ழுறுக்க வல்லே
பண்ணுக பசும்பொற் றேரும் படுமதக் களிறு மாவும்
கண்ணகன் புரிசை காக்குங் காவல ரடைக வென்றான்
விண்ணுரு மேறுபோன்று வெடிபட முழங்குஞ்
சொல்லான். 77

புலிப்பொறிப் போர்வை நீக்கிப் பொன்னணிந் திலங்கு கின்ற
ஒலிக்கழன் மன்ன ருட்கு முருச்சுடர் வாளை நோக்கிக்
கலிக்கிறை யாய நெஞ்சிற் கட்டியங் கார னம்மேல்
வலித்தது காண்டு மென்று வாளெயி றிலங்க நக்கான். 78

## விசயைக்குக் காவலன் விளம்பியவை

நங்கைநீ நடக்கல் வேண்டு நன்பொருட் கிரங்கல்வேண்டா
கங்குனீ யன்று கண்ட கனவெலாம் விளைந்த வென்னக்
கொங்கலர் கோதை மாழ்கிக் குழைமுகம் புடைத்து வீழ்ந்து
செங்கயற் கண்ணி வெய்ய திருமகற் கவலஞ் செய்தாள். 79

மல்லலைத் தெழுந்து வீங்கி மலைதிரண் டனைய தோளான்
அல்லலுற் றழுங்கி வீழ்ந்த வமிர்தமன் னாளை யெய்திப்
புல்லிக்கொண் டவல நீக்கிப் பொம்மல்வெம் முலையி னாட்குச்
சொல்லுவா னிவைகள் சொன்னான் சூழ்கழற் காலி னானே. 80

சாதலும் பிறத்த லுனுந் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி
யென்றான். 81

தொல்லைநம் பிறவி யெண்ணிற் றெருடுகடன் மணலு மாற்ரு
எல்லைய வவற்று ளெல்லா மேதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிக டம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
இல்லினு ளிரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா. 82

வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனுல் வடித்தநுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயு முணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் திணையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்ருலொழிகநின் கவலையென்ருன். 83

உரிமைமுன் போக்கி யல்லா லொளியுடை மன்னர் போகார்
கருமமீ தெனக்கு மூர்தி சமைந்தது கவல வேண்டா
புரிநரம் பிரங்குஞ் சொல்லாய் போவதே பொருண்மற் றென்ருன்
எரிமுயங் கிலங்கு வாட்கை யேற்றிளஞ் சிங்க மன்னன் 84

## மயிற்பொறியில் விசயை புறம்போதல்

என்புநெக் குருகி யுள்ள மொழுகுபு சோர யாத்த
அன்புமிக் கவலித் தாற்ரு வாருயிர்க் கிழத்தி தன்னை
இன்பமிக் குடைய சீர்த்தி யிறைவன தாணை கூறித்
துன்பமில் பறவை யூர்தி சேர்த்தினன் துணைவி
சேர்ந்தாள். 85

(வேறு)

## போர்க்களக் காட்சிகள்

நீரு டைக்கு வளையி னெடுங்க ணின்ற வெம்பனி
வாரு டைம்மு லைமுகந் நனைப்ப மாதர் சென்றபின்
சீரு டைக்கு ருசிலுஞ் சிவந்த ழன்ரேர் தீத்திரள்
பாரு டைப்ப னிக்கடல் சுடுவ தொத்து லம்பினன். 86

முழைமு கத்தி டியரி வளைத்த வன்ன மள்ளரிற்
குழைமு கப்பு ரிசையுட் குருசி ருன கப்பட
இழைமு கத்தெ றிபடை யிலங்கு வாட்க டலிடை
மழைமு கத்த குஞ்சரம் வாரி யுள்வ ளைத்தவே. 87

அயிலி னிற்பு ஊனந்தவா ளழன்று ருத்து ரீஇயுடன்
பயில்க திர்ப்ப ருமணிப் பன்ம யிர்ச்செய் கேடகம்
வெயிலெ னத்தி ரித்துவிண் வழுக்கி வந்து வீழ்ந்ததோர்
கயில ணிக்க திர்நகைக் கடவு ளொத்து லம்பினுன். 88

மாரி யிற்க டுங்கணை சொரிந்து மள்ள ரார்த்தபின்
வீரி யக்கு ருசிலும் விலக்கி வெங்க ணைமழை
வாரி யிற்க டிந்துட னகற்ற மற்ற வன்படைப்
பேரி யற்பெ ருங்களி றுபின்னி வந்த டைந்தவே. 89

சீற்ற மிக்க மன்னவன் சேர்ந்த குஞ்ச ரந்நுதற்
கூற்ற ருங்கு ருதிவாள் கோடு றவ ழுத்தலின்
ஊற்று டைநெ டுவரை யுருமு டன்றி டித்தென
மாற்ற ரும்ம தக்களி றுமத்த கம்பி ளந்தவே. 90

வேன்மி டைந்த வேலியும் பிளந்து வெங்கண் வீரரை
வான்ம யிர்ச்செய் கேடகத் திடித்து வாள்வ லையரிந்
தூனு டைக்கு ருதியுள் ளுழக்கு புதி ரிதரத்
தேன்மி டைந்த தாரினுன் செங்க ளஞ்சி றந்ததே. 91

(வேறு)

உப்புடைய முந்நீ ருடன்றுகரை கொல்வ
தொப்புடைய தானையு ளொருதனிய னுகி
இப்படி யிறைமக னிருங்களிறு நூற
அப்படையு ளண்ணலு மழன்றுகளி றுந்தி. 92

நீடக மிருந்தநிழ னேமிவல னேந்திக்
கேடக மறுப்பநடு வற்றரவு சேர்ந்தாங்
கோடுகதிர் வட்டமென வொய்யென வுலம்பிக்
காடுகவர் தீயின்மிகை சீறுபு வெகுண்டான். 93

நெய்ம்முக மணிந்துநிழ றங்கியழல் பொங்கி
வைம்முக மணிந்தநுதி வாளழல வீசி

மைம்முக மணிந்தமத யானைதவ நூறிக்
கைம்முத றுணிந்துகளி ருழவது நோனான். 94

மாலைநுதி கொண்டுமழை மின்னென விமைக்கும்
வேலைவல னேந்திவிரி தாமமழ கழியச்
சோலைமயி லார்கடுணை வெம்முலைக டுஞ்சும்
கோலவரை மார்பினுறு கூற்றென வெறிந்தான். 95

(வேறு)

புண்ணிடங் கொண்ட வெஃகம் பறித்தலிற் பொன்னனார் தம்
கண்ணிடங் கொண்ட மார்பிற் றடாயின காது வெள்வேல்
மண்ணிடங் கொண்ட யானை மணிமருப் பிடையிட் டம்ம
விண்ணிட மள்ளர் கொள்ள மிறைக்கொளி திருத்தி
னானே. 96

ஏந்தல்வே றிருத்த யானை யிரிந்தன வெரிபொற் கண்ணி
நாந்தக வுழவர் நண்ணார் கூற்றென நடுங்கி மள்ளர்
சாய்ந்தபின் றறுக ணாண்மைக் கட்டியங் காரன் வேழம்
காய்ந்தனன் கடுக வுந்திக் கப்பணஞ் சிதறி னானே. 97

குன்றமார் பரிந்து வெள்வேற் குடுமிமா மஞ்ஞை யூர்ந்து
நின்றமால் புருவம் போல நெரிமுரி புருவ மாக்கிக்
கொன்றவன் வேழம் வீழ்ப்ப மற்றுமோர் களிற்றிற் பாய்ந்து
நின்றமா மள்ளர்க் கெல்லா நீண்முடி யிலக்க மானான். 98

(வேறு)

நஞ்சுபதி கொண்டவள நாகணையி னன்றன்
நெஞ்சுபதி கொண்டுபடை மூழ்கநிலம் வீசு
மஞ்சுதவழ் குன்றனைய தோளொசிந்து மாத்தாட்
குஞ்சரங்க ளூறிக்கொலை வாளொடித்து நின்றான். 99

ஆரமரு ளாண்டகையு மன்னவகை வீழும்
வீரரெறி வெம்படைகள் வீழவிமை யானைப்
பேரமரு ளன்றுபெருந் தாதையொடும் பேராப்
போரமரு ணின்றவினை யோனிற்பொலி வுற்றான். 100

போழ்ந்துகதிர் நேமியொடு வேல்பொரு தழுந்தத்
தாழ்ந்துதறு கண்ணிணைக டையழல விழியா
வீழ்ந்துநில மாமகடன் வெம்முலை ஞெமுங்க
ஆழ்ந்துபடு வெஞ்சுடரி னுண்டகை யவிந்தான். 101

## சச்சந்தன் சாவு

(வேறு)

தோய்ந்தவிசும் பென்னும் தொன்னுட்டகந் தொழுது
புலம்பெய்தி மைந்தர் மாழ்க
ஏந்து முலையாரினைந் திரங்கக் கொடுங் கோலிருள் பரப்பவேஎ
பாவம்
ஆய்ந்த குருகுலமா மாழ்கடலினுண் முளைத்தவறச்
செங்கோலாய் கதிரிணை
வேந்தர் பெருமானைச் சச்சந்தனை மந்திரிமா நாகமுடன்
விழுங்கிற்றன்றே. 102

பாலருவித் திங்கடோய் முத்தமாலைப் பழிப்பினெடுங்
குடைக்கீழ்ப் பாய்பரிமான்றேர்க்
கோலருவி வெஞ்சிலையான் கூர்வாளோடு மணிக் கேடகமு
மறமு மாற்றி
வாலருவி வாமனடித் தாமரை மலர்சூடி மந்திர மென்சாந்து பூசி
வேலருவிக் கண்ணினர் மெய்காப் போம்ப வேந்தன்போய்
விண்ணோர்க்கு விருந்தாயினனே. 103

## உரிமைச்சுற்றம் புலம்பல்

செந்தீக் கருந்துளைய தீங்குழல் யாழ்தேந்தே மென்னு மணி
முழவமும்
தந்தாங் கிளையார் மெல்விரல்கடீண்டத் தாந்தா மென்றிரங்குந்
தண்ணுமைகளும்
அந்தீங்கிள வியாரைஞ்ஞூற்று வரவை துறைபோயாட லரம்பை
யன்னர்
எந்தாய் வெறுநிலத்துச் சேர்தியோ வென்றினைந்திரங்கிப்
பள்ளி படுத்தார்களே. 104

மடையவிழ்ந்த வெள்ளிலை வேலம்புபாயமணிச் செப்பகங்
கடைகின்றவே போற்
றொடையவிழ்ந்த மாலையுமுத்துந் தோய்ந்ததுணை முலையினுள்
ளரங்கிழுழ்கக் காமன்
படையவிழ்ந்த கண்பனிநீர்பாய விம்மாப் பருமுத்த
நாமழலைக் கிண்கிணியினார்
புடையவிழ்ந்த கூந்தல் புலவுத்தோயப் பொழிமழையுண்
மின்னுப்போற் புலம்பினாரே. 105

அரிமானேர் மெல்லணைமேன் மஞ்ஞைசூழக் கிடந்தாங்கு
வேந்தன் கிடந்தா னைத்தான்
கரிமாலை நெஞ்சினான் கண்டான் கண்டேகைதொழுதான்
கண்ணீர்கலுழ்ந் துகுத்தபின்
எரிமாலை யீமத்திழுதார்குட மேனைநூறு மேற்பச்
சொரிந்த லறியெம்
பெருமானே யெம்மை யொளித்தியோ வென்னுப்பெரிய
கண்ணீர்சொரிந் தலறுவார். 106

கையார் வளைகள்புடைத் திரங்குவார் கதிர்முலை மேலாரம்பரிந்
தலறுவார்
நொய்யார் கருங்குழன் மேன்மாலைசிந்தி நிலத்திடுவார்
நின்று திருவில்வீசும்
மையார் கடிப்பிணையும் வார்குழையுங் களைந்திடுவார்
கையால் வயிறதுக்குவார்
ஐயாவோ வென்றழுவார் வேந்தன்செய்த கொடுமைகொடி
தென்பார்கோல் வளையினார். 107

பானுட் பிறைமருப்பிற் பைங்கண்வேழம் பகுவாயோர்
பையணன்மா நாகம் வீழ்ப்பத்
தேனார் மலர்ச்சோலைச் செவ்வரை யின்மேற் சிறுபிடிகள்
போலத் துயருழந்துதாம்
ஆனாதடி யேம்வந் தவ்வுலகினின் னடியடைது மென்றழுது
போயி னாரெம்
கோனார் பறிப்பநலம் பூத்தவிக் கொடியினிப் பூவா
பிறர்பறிப்பவே. 108

செங்கட் குறுநரியோர் சிங்க வேற்றைச் செகுத்தாங்
கதனிடத்தைச் சேர்ந்தா லொப்ப
வெங்கட் களியானை வேல்வேந்தனை விறலெரியின்
வாய்ப்பெய்தவன்பெ யர்ந்துபோய்ப்
பைங்கட் களிற்றின்மேற் றன்பெ யரினுற் பறையறைந்தான்
வேன்மாரி பெய்தா லொப்ப
எங்க ணவருமி னைந்தி ரங்கினு ரிருண்மனத்தான் பூமகளை
யெய்தினுனே. 109

## சீவகன் பிறப்பு

(வேறு)

களிமுகச் சுரும்புண் கோதை கயிலெருத் தசைந்து சோர
வளிமுகச் சுடரி னில்லா மனத்தொடு மயங்கி யிப்பாற்
சுளிமுகக் களிற னுன்றன் சொன்னய நெறியிற் போய
கிளிமுகக் கிளவிக் குற்ற திற்றெனக் கிளக்க லுற்றேன். 110

எஃகென விளங்கு வாட்க ணெறிகட லமிர்த மன்னுள்
அஃகிய மதுகை தன்னு லாய்மயி லூரு மாங்கண்
வெஃகிய புகழி னுன்றன் வென்றிவெம் முரச மார்ப்ப
எஃகெறி பிணையின் மாழ்கியிறுகி மெய்ம் மறந்து
சோர்ந்தாள். 111

மோடுடை நகரி னீங்கி முதுமரந் துவன்றி யுள்ளம்
பீடுடை யவரு முட்கப் பிணம்பல பிறங்கி யெங்கும்
காடுடை யளவை யெல்லாங் கழுகிருந் துறங்கு நீழற்
பாடுடை மயிலந் தோகை பைபய வீழ்ந்த தன்றே. 112

மஞ்சுசூழ் வதனை யொத்துப் பிணப்புகை மலிந்து பேயும்
அஞ்சுமம் மயானந் தன்னு ளகில்வயி ருர்ந்த கோதை
பஞ்சிமேல் வீழ்வ தேபோற் பல்பொறிக் குடுமி நெற்றிக்
குஞ்சிமா மஞ்ஞை வீழ்ந்து கால்குவித் திருந்த தன்றே. 113

வார்தரு தடங்க ணீர்தன் வனமுலை நனைப்ப வேல்பெற்
றூர்கட லனைய காட்டு ளச்சமொன் றுனு முள்ளாள்

ஏர்தரு மயிலஞ் சாய லிறைவனுக் கிரங்கி யேங்கிச்
சோர்துகி றிருத்த றேற்ற டுணைபிரி மகன்றி லொத்தாள். 114

உண்டென வுரையிற் கேட்பா ருயிருறு பாவ மெல்லாம்
கண்டினித் தெளிக வென்று காட்டுவாள் போல வாகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியளானாள். 115

இருள்கெட விகலி யெங்கு மணிவிளக் கெரிய வேந்தி
அருளுடை மனத்த வாகி யணங்கெலாம் வணங்கி நிற்பப்
பொருகடற் பருதி போலப் பொன்னனான் பிறந்த போழ்தே
மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே. 116

பூங்கழற் குருசி றந்த புதல்வனைப் புகன்று நோக்கித்
தேங்கம ழோதி திங்கள் வெண்கதிர் பொழிவ தேபோல்
வீங்கிள முலைகள் விம்மித் திறந்துபால் பிலிற்ற வாற்றாள்
வாங்குபு திலகஞ் சேர்த்தித் திலகனைத் திருந்த
வைத்தாள். 117

## விசயையின் மனநிலை

கறைபன் னீராண் டுடன்விடுமின் காமர் சாலை தளிநிறுமின்
சிறைசெய் சிங்கம் போன் மடங்கிச் சேரா மன்னர்
சின்மழுங்க
உறையுங் கோட்ட முடன்சீமி னொண்பொற் குன்றந்
தலைதிறந்திட்
டிறைவன் சிறுவன் பிறந்தானென் றேற்பார்க் கூர்தோ
றுய்த்தீமின். 118

மாட மோங்கும் வளநகருள் வரம்பில் பண்டந் தலைதிறந்திட்
டாடை செம்பொ னணிகலங்கள் யாவும் யாருங்
கவர்ந்தெழுநாள்
வீட லின்றிக் கொளப்பெறுவார் விலக்கல் வேண்டா வீழ்ந்
தீர்க்குக்
கோடி மூன்றோ டரைச்செம்பொன் கோமா னல்கு
மெனவறைமின். 119

அரும்பொற் பூணு மாரமு மிமைப்பக் கணிகளகன் கோயில்
ஒருங்குகூடிச் சாதகஞ்செய் தோகை யரசர்க்குடன் போக்கிக்
கருங்கைக் களிறுங் கம்பலமுங் காசுங் கவிகள் கொளவீசி
விரும்பப் பிறப்பாய் வினைசெய்தேன் காணவிஃதோஒ
பிறக்குமா. 120

வெவ்வா யோரி முழவாக விளிந்தா ரீமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கி னிழல்போ னுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கு மிருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா ருகிப் பிறப்பதோ விதுவோ மன்னர்க்
கியல்வேந்தே. 121

பற்று மன்ன னகர்ப்புறமாற் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்று ரில்லாத் தமியேனு லொதுங்க லாகாத் தூங்கிருளால்
மற்றிஞ் ஞால முடையாய்நீ வளரு மாறு மறியேனால்
எற்றே யிதுகண் டேகாதே யிருத்தியாலென்
னின்னுயிரே. 122

பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமா னடிகள் பேரறமும்
புறந்தந் தென்பாற் றுயர்க்கடலை நீந்தும் புணைமற்றுகாக்காற்
சிறந்தா ருளரே லுரையாயாற் **சிந்தாமணியே** கிடத்தியால்
மறங்கூர் நுங்கோன் சொற்செய்தேன் மம்மர் நோயின்
வருந்துகோ. 123

## இயற்கையின் பரிவு

அந்தோ விசயை பட்டனகொண் டகங்கை புறங்கை
யாறுற்பேர்ற்
கந்தார் களிற்றுத் தங்கோமான் கழிய மயிலோர் மயிலூர்ந்து
வந்தாற் போலப் புறங்காட்டுள் வந்தா டமியே
யெனமரங்கள்
சிந்தித் திரங்கி யழுவனபோற் பனிசேர் கண்ணீர்
சொரிந்தனவே! 124

## விசயை அந்தியொத்தாள்

அடர்பொற் பைம்பூ ணரசழிய வரும்பொற் புதல்வற் பெற்றிருந்த
இடர்கொ ணெஞ்சத் திறைவியு மிருங்கண் ஞாலத்திருள் பருகிச்
சுடர்போய் மறையத் துளங்கொளிய குழவிமதிபெற் றகங்குளிர்ந்த
படர்தீ ரந்தி யதுவொத்தாள் பணைசெய்கோட்டுப் படா முலையாள். 125

## சண்பக மாலையின் உதவி
(வேறு)

தேனமர் கோதை மாதர் திருமகன் றிறத்தை யோராள்
யானெவன் செய்வ லென்றே யவலியா விருந்த போழ்திற்
றூனமர்ந் துழையி னீங்காச் சண்பக மாலை யென்னும்
கூனிய துருவங் கொண்டோர் தெய்வதங் குறுகிற் றன்றே. 126

விம்முறு விழும வெந்நோ யவணுறை தெய்வஞ் சேரக்
கொம்மென வுயிர்த்து நெஞ்சிற் கொட்புறு கவலை நீங்க
எம்மனை தமியை யாகி யிவ்விட ருற்ற தெல்லாம்
செம்மலர்த் திருவின் பாவா யான்செய்த பாவ மென்றாள். 127

பூவினுட் பிறந்த தோன்றற் புண்ணிய னனைய நம்பி
நாவினு ளுலக மெல்லா நடக்குமொன் றுது நின்ற
கோவினை யடர்க்க வந்து கொண்டுபோ மொருவ னின்னே
காவியங் கண்ணி னுயா மறைவது கரும மென்றாள். 128

சின்மணி மழலை நாவிற் கிண்கிணி சிலம்பொ டேங்கப்
பன்மணி விளக்கி னீழ னம்பியைப் பள்ளி சேர்த்தி
மின்மணி மிளிரத் தேவி மெல்லவே யொதுங்கு கின்றாள்
நன்மணி யீன்று முந்நீர்ச் சலஞ்சலம் புகுவ தொத்தாள். 129

ஏதிலா ரிடர்பன் னூறு செய்யினுஞ் செய்த வெல்லாம்
தீதில வாக வென்று திருமுலைப் பான்ம டுத்துக்
காதலான் பெயர்சு மந்த கதிர்மணி யாழி சேர்த்திக்
கோதைதாழ் குழலினுளைக் கொண்டு போய் மறைய
நின்றுள். 130

நல்வினை செய்தி லாதே னம்பிநீ தமியை யாகிக்
கொல்வினை மாக்கள் சூழக் கிடத்தியோ வென்று விம்மாப்
புல்லிய கொம்பு தானோர் கருவிளை பூத்த தேபோல்
ஒல்கியோர் கொம்பு பற்றி யொருகணு னேக்கி நின்றுள். 131

## கந்துக்கடன் சீவகனை எடுத்தல்

(வேறு)

நாளொடு நடப்பது வழுக்கி மின்னெடூர்
கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தெனக்
காளக வுடையினன் கந்து நாமனும்
வாளொடு கனையிருள் வந்து தோன்றினுன். 132

வாள்கடைந் தழுத்திய கண்ணி னூர்கடந்
தோள்கடைந் தழுத்திய மார்பன் றூங்கிருள்
நீள்சுடர் நிழன்மணி கிழிப்ப நோக்கினுன்
ஆள்கடிந் தணங்கிய வணங்கு காட்டுளே. 133

அருப்பிள முலையவர்க் கனங்க னுகிய
மருப்பிளம் பிறைநுதன் மதர்வை வெங்கதிர்
பரப்புபு கிடந்தெனக் கிடந்த நம்பியை
விருப்புள மிகுதியின் விரைவி னெய்தினுன். 134

புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
வனைமலர்த் தாரினுன் மறைத்து வண்கையாற்
றுனைகதிர் முகந்தென முகப்பத் தும்மினுன்
சினைமறைந் தொருகுரல் **சீவ** வென்றதே. 135

என்பெழுந் துருகுபு சோர வீண்டிய
அன்பெழுந் தரசனுக் கவலித் தையனை
நுன்பழம் பகைதவ நூறு வாயென
இன்பழக் கிளவியி னிறைஞ்சி யேத்தினுள். 136

ஒழுக்கிய லருந்தவத் துடம்பு நீங்கினுர்
அழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே
வழுக்கிய புதல்வனங் கொழிய மாமணி
விழுத்தகு மகனெடும் விரைவி னேகினுன். 137

## சுநந்தையிடம் சீவகக்குழவியை நல்குதல்

மின்னடு கனையிரு ணீந்தி மேதகு
பொன்னுடை வளநகர் பொலியப் புக்கபின்
தன்னுடை மதிசுடத் தளருந் தையலுக்
கின்னுடை யருண்மொழி யினிய செப்பினுன். 138

பொருந்திய வுலகினுட் புகழ்கண் கூடிய
அருந்ததி யகற்றிய வாசில் கற்பினுய்
திருந்திய நின்மகன் றீதி னீங்கினுன்
வருந்தனீ யெம்மனை வருக வென்னவே. 139

கள்ளலைத் திழிதருங் களிகொள் கோதைதன்
உள்ளலைத் தெழுதரு முவகை யூர்தர
வள்ளலை வல்விரைந் தெய்த நம்பியை
வெள்ளிலை வேலினுன் விரகி னீட்டினுன். 140

## மகிழ்ச்சி ஆர்ப்பு

சுரிமுக வலம்புரி துவைத்த தூரியம்
விரிமுக விசும்புற வாய்விட் டார்த்தன
எரிமுக நித்தில மேந்திச் சேந்தபோற்
கரிமுக முலையினுர் காய்பொன் சிந்தினுர். 141

## கட்டியங்காரன் நிதி வழங்குதல்

அழுகுரன் மயங்கிய வல்ல லாவணத்
தெழுகிளை மகிழ்ந்தெம தரசு வேண்டினுன்
கழிபெருங் காதலான் கந்து நாமனென்
றுழிதரு பெருநிதி யுவப்ப நல்கினுன். 142

## கொடைக்கடன் பூண்டல்

திருமகற் பெற்றெனச் செம்பொற் குன்றெனப்
பெருநல நிதிதலை திறந்து பீடுடை
இருநிலத் திரவலர்க் கார்த்தி யின்னணம்
செருநிலம் பயப்புறச் செல்வன் செல்லுமே. 143

(வேறு)

நல்லுயிர் நீங்கலு நன்மாண் புடையதொர்
புல்லுயிர் தன்னெடு நின்றுழிப் புல்லுயிர்
கல்லுயிர் காட்டிற் கரப்பக் கலங்கவிழ்த்
தல்லலுற் ருளுற்ற தாற்ற வுரைப்பாம். 144

## விசயையினைத் தெய்வம் தவப்பள்ளியில் சேர்த்தல்

பொறியறு பாவையிற் பொம்மென விம்மி
வெறியுறு கோவை வெறுநில மெய்த
இறுமுறை யெழுச்சியி னெய்துவ தெல்லாம்
நெறிமையிற் கூற நினைவி னகன்ருள். 145

பெருமகற் காக்கம் பிறழ்வின்றிக் கேட்டே
திருமக டானினிச் செய்வதை யெல்லாம்
ஒருமனத் தன்ஞ யுரையென லோடும்
தெருமரு தெய்வதஞ் செப்பிய தன்றே. 146

மணியறைந் தன்ன வரியற லைம்பாற்
பணிவருங் கற்பிற் படைமலர்க் கண்ணுய்
துணியிருட் போர்வையிற் றுன்னுபு போகி
அணிமணற் பேர்யாற் றம்ரிகை சார்வாம். 147

அமரிகைக் கோசனை யைம்பது சென்றுற்
குமரிக் கொடிமதிற் கோபுர மூதூர்
தமரிய லோம்புந் தரணி திலகம்
நமரது மற்றது நண்ணல மாகி. 148

வண்டார் குவளைய வாவியும் பொய்கையும்
கண்டார் மனங்கவர் காவுங் கஞலிய
தண்டா ரணியத்துத் தாபதப் பள்ளியொன்
றுண்டாங் கதனு ளுறைகுவ மென்றாள். 149

பொருளுடை வாய்மொழி போற்றினள் கூற
மருளுடை மாதர் மதித்தன ளாகி
அருளுடை மாதவ ரத்திசை முன்னி
இருளிடை மின்னி னிலங்கிழை சென்றாள். 150

(வேறு)

உருவ மாமதி வாண்முகத் தோடிய
இருவி லும்மெறி மாமக ரக்குழைத்
திருவி லும்மிவை தேமொழி மாதரைப்
பொருவி னீளதர் போக்குவ போன்றவே. 151

(வேறு)

சிலம்பிரங்கிப் போற்றிசைப்பத் திருவிற்கைபோய் மெய்காப்ப
இலங்குபொற் கிண்கிணியுங் கலையுமேங்க வெறிவேற்கண்
மலங்கமணி மலர்ந்த பவளக்கொம்பு முழுமெய்யும்
சிலம்பிவலந் ததுபோற்போர் வைபோர்த்துச் செல்லுற்றாள். 152

பஞ்சிய டரனிச்ச நெருஞ்சியீன்ற பழமாலென்
றஞ்சுமலரடி களரங்கண் டன்னவரும் காட்டுட்
குஞ்சித் தசைந்தசைந்து குருதிகான்று வெய்துயிரா
வஞ்சியிடை நுடங்கமயில் கைவீசி நடந்ததே. 153

(வேறு)

தடங்கொ டாமரைத் தாதுறை தேவியும்
குடங்கை போலுண்கட் கூனியுங் கூர்ம்பரற்

கடங்க ளும்மலை யுங்கடந் தார்புனல்
இடங்கொள் யாற்றக மெய்தின ரென்பவே. 154

எல்லை யெய்திய வாயிரச் செங்கதிர்
மல்லன் மாக்கடற் றேன்றலும் வைகிருட்
டொல்லை நல்வினை முற்படத் தோன்றிய
அல்லல் வெவ்வினை போல வகன்றதே. 155

நுணங்கு நுண்கொடி மின்னோர் மழைமிஞ்ச
மணங்கொள் வார்பொழில் வந்துகி டந்ததொத்
தணங்கு நுண்டுகின் மேலசைந் தாளரோ
நிணங்கொள் வைந்நுதி வேனெடுங் கண்ணினாள் 156

வைகிற் றெம்மனை வாழிய போழ்தெனக்
கையி னனடி தைவரக் கண்மலர்ந்
தைய வோவென் றெழுந்தன ளாய்மதி
மொய்கொள் பூமி முளைப்பது போலவே. 157

தூவி யஞ்சிறை யன்னமுந் தோகையும்
மேவி மென்புன மானின மாதியா
நாவி நாறெழின் மேனியைக் கண்டுகண்
டாவித் தாற்றுகி லாதழு திட்டவே. 158

கொம்மை வெம்முலைப் போதிற் கொடியனாள்
உம்மை நின்றதொ ரூழ்வினை யுண்மையால்
இம்மை யிவ்விட ருற்றன ளெய்தினாள்
செம்மை மாதவர் செய்தவப் பள்ளியே. 159

## விசயையினைத் தவநெறிப்படுத்தல்

(வேறு)

வாளுறை நெடுங்க ணாளை மாதவ மகளி ரெல்லாம்
தோளுறப் புல்லு வார்போற் றிருக்கெதிர் கொண்டுபுக்குத்
தாளுறு வருத்த மோம்பித் தவநெறிப் படுக்க லுற்று
நாளுறத் திங்க ளூர நல்லணி நீக்கு கின்றார். 160

திருந்து தகரச் செந்நெருப்பிற் றேன்றேய்த் தமிர்தங்
கொளவுயிர்க்கும்
கருங்கா ழகிலி னறும்புகையிற் கழுமிக் கோதைகண்படுக்கும்
திருந்து நானக் குழல்புலம்பத் தேனும் வண்டு மிசைப்புலம்ப
அரும்பொன் மாலை யலங்கலோ டாரம் புலம்ப
வகற்றினுள். 161

திங்க ளுகிரிற் சொலிப்பதுபோற் றிலகம் விரலிற்று னீக்கிப்
பைம்பொன் மகர குண்டலமும் பாவை கழுத்தி னணிகலமும்
வெங்கண் வேந்தற் கமிர்தாகி வேற்கட் பாவை பகையாய
அங்கண் முலையி னணிமுத்து மரும்பொற் பூணு
மகற்றினுள். 162

பஞ்சி யனைய வேய்மென்றேட் பகுவாய் மகரங் கான்றிட்ட
துஞ்சாக் கதிர்கொ டுணைமுத்தந் தொழுதே னும்மை
யெனத்துறந்து
அஞ்சி வருத்து நுசுப்பினுள் வளைகை யுடைத்து
மணிக்காந்தள்
அஞ்சச் சிவந்த மெல்விரல்சூ ழரும்பொ னுழி
யகற்றினுள். 163

பூப்பெய் செம்பொற் கோடிகமும் பொன்னு ரால வட்டமும்
ஆக்கு மணிசெய் தேர்த்தட்டு மரவின் பையு மடுமல்குல்
வீக்கி மின்னுங் கலையெல்லாம் வேந்தன் போகி
யரம்பையரை
நோக்கி நும்மை நோக்கானீர் நேவாதொழிமி
னெனத் துறந்தாள். 164

பிடிக்கை போலுந் திரள்குறங்கி னணியு நீக்கிப்பிணை
யன்னுள்
அடிக்கிண் கிணியு மஞ்சிலம்பும் விரன்மோ திரத்தோ
டகற்றியபின்
கொடிப்பூத் துதிர்ந்த தோற்றம்போற் கொள்ளத் தோன்றி
யணங்கலற
உடுத்தாள் கற்றேய் நுண்கலிங்க முரவோன் சிறுவ
னுயர்கெனவே. 165

பாலுடை யமிர்தம்பைம்பொற் கலத்திடைப் பாவையன்ன
நூலடு நுசுப்பி னல்லா ரேந்தவு நேர்ந்து நோக்காச்
சேலடு கண்ணி காந்தட் டிருமணித் துடுப்பு முன்கை
வாலட கருளிச் செய்ய வனத்துறை தெய்வ மானுள். 166

## நம்பி நினைவு

மெல்விரன் மெலியக்கொய்த குளநெல்லும் விளைந்த வாம்பல்
அல்லியு முணங்கு முன்றி லணில்விளித் திரிய வாமான்
புல்லிய குழவித் திங்கட் பொழிகதிர்க் குப்பை போலும்
நல்லெழிற் கவரி யூட்ட நம்பியை நினைக்கு மன்றே. 167

## தெய்வம் தன் இருப்பிடம் சேர்தல்

பெண்மைநாண் வனப்புச் சாயல் பெருமட மாது பேசின்
ஒண்மையி னொருங்கு கூடி யுருவுகொண் டனைய நங்கை
நண்ணிய நுங்கட் கெல்லா மடைக்கல மென்று நாடும்
கண்ணிய குலனுந் தெய்வங் கரந்துரைத் தெழுந்த
தன்றே. 168

(வேறு)

உறுதி சூழ்ந்தவ ளோடலி னுயிடை
மறுவில் வெண்குடை மன்னவன் காதலஞ்
சிறுவன் றன்மையைச் சேர்ந்தறிந் திவ்வழிக்
குறுக வம்மெனக் கூனியைப் போக்கினுள். 169

நெஞ்சி னுத்தினி யானையென் னீர்மையால்
வஞ்சித் தேனென வஞ்சியங் கொம்பனுள்
பஞ்சி மெல்லடிப் பல்கல னார்ப்பச்சென்
றிஞ்சி மாநகர்த் தன்னிட மெய்தினுள். 170

## விசயை தெய்வத்தின் வரவு நோக்குதல்

தானுந் தன்னுணர் விற்றளர்ந் தாற்றவும்
மானி னோக்கிவ ரும்வழி நோக்கிநின்

ருனி யம்பல வாசையிற் செல்லுமே
தேனி யம்புமொர் தேம்பொழிற் பள்ளியே. 171

(வேறு)

மட்டவிழ் கோதை வாளன வுண்கண் மயிலன்னாள்
கட்டழ லெவ்வங் கைம்மிக நீக்கிக் களிகூர
விட்டகல் வாற்ரு வேட்கையி னேடும் பொழுதிப்பாற்
பட்டதை யெல்லாம் பல்லவர் கேட்கப் பகர்குற்றேன். 172

## வளர்ப்புப்பெற்ரோர் 'சீவகன்' எனப்பெயரிடல்

கூற்றம் மஞ்சுங் கொன்னுனை யெஃகின் னிளையானும்
மாற்றம் மஞ்சும் மன்னிய கற்பின் மடவாளும்
போற்றித் தந்த புண்ணியர் கூடிப் புகழோனைச்
சீற்றத் துப்பிற் **சீவக** னென்றே பெயரிட்டார். 173

## சீவகன் வளர்ச்சி

மேகம் மீன்ற மின்னனை யாடன் மிளிர்பைம்பூண்
ஆகம் மீன்ற வம்முலை யின்பா லமிர்தேந்தப்
போகம் மீன்ற புண்ணிய னெய்த கணையேபோல்
மாகம் மீன்ற மாமதி யன்னான் வளர்கின்ருன். 174

அம்பொற் கொம்பி னுயிழை யைவர் நலனேம்பப்
பைம்பொற் பூமிப் பல்கதிர் முத்தார் சகடம்மும்
செம்பொற் றேரும் வேழமு மூர்ந்து நிதிசிந்தி
நம்பன் செல்லு நாளினு நாளு நலமிக்கே. 176

பல்பூம் பொய்கைத் தாமரை போன்றும் பனிவானத்
தெல்லார் கண்ணு மின்புற வூரும் மதிபோன்றும்
கொல்லுஞ் சிங்கக் குட்டியும் போன்றிவ் வுலகேத்தச்
செல்லும் மன்னே சீவகன் றெய்வப் பகைவென்றே. 176

## வளர்ப்புப்பெற்ரோரின் வண்மை

மணியும் முத்தும் மாசறு பொன்னும் பவளம்மும்
அணியும் பெய்யும் மாரியி னேற்பார்க் கவைநல்கிக்

கணிதம் மில்லாக் கற்பகங் கந்துக் கடனொத்தான்
இணைவே லுண்க ணந்தையு மின்பக் கொடியொத்தாள். 177

## கலைபயில் தெளிவு

சாதிப் பைம்பொன் றன்னொளி வெளவித் தகைகுன்ற
நீதிச் செல்வம் மேன்மே னீந்தி நிறைவெய்திப்
போதிச் செல்வம் பூண்டவ ரேத்தும் பொலிவின்றல்
ஆதிக் காலத் தந்தணன் காதன் மகனொத்தான். 178

(வேறு)

நனந்தலை யுலகின் மிக்க நன்னுதன் மகளிர் தங்கள்
மனந்தளை பரிய நின்ற மதலைமை யாடு கென்றே
பொனங்கொடி யிறைஞ்சி நின்று பூமகள் புலம்பி வைக
அனங்கனுக் கவலஞ் செய்யு மண்ணனற்றுயு
றைத்தாள். 179

முழவெனத் திரண்ட திண்டோண் மூரிவெஞ் சிலையினனும்
அழலெனக் கனலும் வாட்க ணவ்வளைத் தோளி னளும்
மழலையாழ் மருட்டுந் தீஞ்சொன் மதலையை மயிலஞ் சாயற்
குழைமுக ஞான மென்னும் குமரியைப் புணர்க்க
லுற்றார். 180

அரும்பொனு மணியு முத்துங் காணமுங் குறுணி யாகப்
பரந்தெலாப் பிரப்பும் வைத்துப் பைம்பொன்செய்
தவிசினுச்சி
இருந்து பொன்னோலை செம்பொ னூசியாலெழுதி யேற்பத்
திருந்துபொற் கண்ணி யாற்குச் செல்வியைச்
சேர்த்தினரே. 181

நாமக ணலத்தை யெல்லா நயந்துடன் பருகி நன்னூல்
ஏமுத லாய வெல்லாப் படைக்கலத் தொழிலு முற்றிக்
காமனுங் கனிய வைத்த புலங்கரை கண்டு கண்ணார்
பூமகள் பொலிந்த மார்பன் புவிமிசைத் திலக
மொத்தான். 182

## சீவகன் பொலிவில் சிக்கிய மகளிர் நிலை

மின்றெளித் தெழுதியன்ன விளங்குநுண் ணுசுப்பி னல்லார்
பொன்றெளித் தெழுதி யன்ன பூம்புறப் பசலை மூழ்கிக்
குன்றொளித் தொழிய நின்ற குங்குமத் தோளி னாற்குக்
கன்றொளித் தகல வைத்த கறவையிற் கனிந்து நின்றார். 183

விலைபகர்ந் தல்குல் விற்கும் வேலினும் வெய்ய கண்ணார்
முலைமுகந் திளையர் மார்ப முரிவில ரெழுதி வாழும்
கலையிகந் தினிய சொல்லார் கங்குலும் பகலு மெல்லாம்
சிலையிகந் துயர்ந்த திண்டோட் சீவகற் கரற்றி யாற்றார். 184

## அச்சணந்தியாசிரியரின் பொருளுரை

வான்சுவை யமிர்த வெள்ளம் வந்திவட் டொக்க தென்னத்
தான்சுவைக் கொண்ட தெல்லாந் தணப்பறக் கொடுத்த பின்றைத்
தேன்சுவைத் தரற்றும் பைந்தார்ச் சீவக குமர னென்ற
ஊன்சுவைத் தொளிறும் வேலாற் குறுதியொன் றுரைக்க லுற்றான். 185

நூனெறி வகையி னோக்கி நுண்ணிதி னுழைந்து தீமைப்
பானெறி பலவு நீக்கிப் பருதியங் கடவு ளன்ன
கோனெறி தழுவி நின்ற குணத்தொடு புணரின் மாதோ
நானெறி வகையி னின்ற நல்லுயிர்க் கமிர்த மென்றான். 186

அறிவினாற் பெரிய நீரா ரருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயர வைவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலு ணின்றார். 187

கூற்றுவன் கொடிய னாகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீக்கி நுகர்ச்சியி லுலகம் நோக்கி
ஆற்றுறப் போத றேற்றா மளியமோஓ பெரிய மேகாண். 188

பேரஞ ரிடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர் தரிதிற் பெற்று மதன்பயன் கோட றேற்றும்
ஓருமைம் பொறியு மோம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த வெல்லாம். 189

தழங்குரன் முரசிற் சாற்றித் தத்துவந் தழுவல் வேண்டிச்
செழுங்களி யாளர் முன்ன ரிருளறச் செப்பி னாலும்
முழங்கழ னரகின் மூழ்கு முயற்சிய ராகி நின்ற
கொழுங்களி யுணர்வி னாரைக் குணவதங் கொளுத்த லாமோ. 190

பவழவாய்ச் செறுவு தன்னு ணித்திலம் பயில வித்திக்
குழவிநா றெழுந்து காளைக் கொழுங்கதி ரீன்று பின்னாக்
கிழவுதான் விளைக்கும் பைங்கூழ் கேட்டிரேற் பிணிசெய் பன்மா
உழவிர்காண் மேயுஞ் சீல வேலியுய்த் திடுமி னென்றான். 191

## சீவகன் நால்வகைச் சரண்புகுதல்

சூழ்கதிர் மதிய மன்ன சுடர்மணிப் பூணி னானும்
வீழ்தரு கதியி னீங்கி விளங்குபொன் னுலகத் துய்க்கும்
ஊழ்வினை துரத்த லானு முணர்வுசென் றெறித்த லானும்
ஆழ்கடற் புணையி னன்ன வறிவரன் சரண டைந்தான். 192

காட்சிநன் னிலையின் ஞானக் கதிர்மணிக் கதவு சேர்த்திப்
பூட்சிசா லொழுக்க மென்னும் வயிரத்தாழ் கொளுவிப் பொல்லா
மாட்சியில் கதிக ளெல்லா மடைத்தபின் வரம்பி லின்பத்
தாட்சியி லுலக மேறத் திறந்தன னலர்ந்த தாரான். 193

நல்லறத் திறைவ னாகி நால்வகைச் சரண மெய்திக்
தொல்லறக் கிழமை பூண்ட தொடுகழற் காலி னாற்குப்
புல்லற நெறிக்க ணின்று பொருள்வயிற் பிழைத்த வாறும்
இல்லறத் தியல்பு மெல்லா மிருளறக் கூறி யிட்டான். 194

## அச்சணந்தியாசான் சீவகன் வரலாற்றினைத் தெருட்டுதல்

எரிமுயங் கிலங்கு வைவே லிளையவர் குழாத்தி னீங்கித்
திருமுயங் கலங்கன் மார்பிற் சீவகற் கொண்டு வேறு
விரிமலர்க் கண்ணி கட்டி விழைதக வேய்ந்த போலும்
தெரிமலர்க் காவு சேர்ந்து பிறப்பினைத் தெருட்ட
லுற்றான். 195

பூவையுங் கிளியு மன்ன ரொற்றெனப் புணர்க்குஞ் சாதி
யாவையு மின்மை யாராய்ந் தந்தளிர்ப் பிண்டி நீழற்
பூவியற் றவிசி னுச்சிப் பொலிவினோ டிருந்த போழ்தில்
ஏவியல் சிலையி னானை யிப்பொருள் கேண்மோ
வென்றான். 196

வையக முடைய மன்னன் சச்சந்த னவற்குத் தேவி
பைவிரி பசும்பொ னல்குற் பைந்தொடி விசயை யென்பாள்
செய்கழன் மன்னன் றேர்ந்து தேவியைப் பொறியிற் போக்கி
மையல்கொ ணெஞ்சிற் கல்லா மந்திரி விழுங்கப்
பட்டான். 197

புலம்பொடு தேவி போகிப் புகற்கருங் காடு நண்ணி
வலம்புரி யுலகம் விற்கு மாமணி யீன்ற தென்ன
இலங்கிழை சிறுவன் றன்னைப் பயந்துபூந் தவிசி னுச்சி
நலம்புரி நங்கை வைத்து நல்லறங் காக்க வென்றாள். 198

வானத்தின் வழுக்கித் திங்கட் கொழுந்துமீன் குழாங்கள்
சூழக்
கானத்திற் கிடந்த தேபோற் கடலக முடைய நம்பி
தானத்து மணியுந் தானு மிரட்டுறத் தோன்றி னானே
ஊனத்திற் றீர்ந்த சீர்த்தி **யுத்தரட் டாதி யானே.** 199

அருந்தவன் முந்து கூற வலங்கல்வே லுய்கன் சென்று
பொருந்துபு சிறுவற் கொண்டு பொலிவொடு புகன்று போகத்
திருந்திய நம்பி யாரத் தும்மினன் றெய்வம் வாழ்த்திற்
றரும்பொனுய் கொண்மோ வென்று னலைகடல் விருப்பிற்
கொண்டாள். 200

## தன் வரலாறுணர்ந்த சீவகன் தளர்ந்து வீழ்தல்

கரியவன் கன்னற் கன்று பிறப்பினைத் தேற்றி யாங்கப்
பெரியவன் யாவ னென்ன நீயெனப் பேச லோடும்
சொரிமலர்த் தாரும் பூணு மாரமுங் குழையுஞ் சோரத்
திருமலர்க் கண்ணி சிந்தத் தெருமந்து மயங்கி
வீழ்ந்தான். 201

## ஆசான் ஆறுதல் கூறுதல்

கற்பகங் கலங்கி வீழ்ந்த வண்ணம்போற் காளை வீழச்
சொற்பகர் புலவன் வல்லே தோன்றலைச் சார்ந்து புல்லி
நற்பல குழீஇய தம்மா னவையறத் தேற்றத் தேறிக்
கற்பனை திணிதிண் டோளான் கவலைநீர்க் கடலுட்
பட்டான். 202

இனையைநீ யாய தெல்லா மெம்மனோர் செய்த பாவம்
நினையனீ நம்பி யென்று நெடுங்கணீர் துடைத்து நீவிப்
புனையிழை மகளிர் போலப் புலம்பனின் பகைவ னின்றான்
நினைவெலா நீங்கு கென்ன நெடுந்தகை தேறி னானே. 203

மலைபக விடிக்குஞ் சிங்க மடங்கலின் முழங்கி மாநீர்
அலைகடற் றிரையிற் சீறி யவவயினார் பருக லூற்றுச்
சிலையொடு பகழி யேந்திக் கூற்றெனச் சிவந்து தோன்றும்
இலையுடைக் கண்ணி யானை யின்னணம் விலக்கி னானே.204

வேண்டுவ னம்பி யானோர் விழுப்பொரு ளென்று சொல்ல
ஆண்டகைக் குரவிர் கொண்மின் யாதுநீர் கருதிற் றென்ன
யாண்டுநே ரெல்லை யாக வவன்றிறத் தழற்சி யின்மை
வேண்டுவ லென்று சொன்னான் வில்வலா னதனை
நேர்ந்தான். 205

## ஆசிரியர் தன் வரலாறுரைத்தல்

வெவ்வினை வெகுண்டு சாரா விழுநிதி யமிர்த மின்னீர்
கவ்விய வெஃகி னின்ற கயக்கமி னிலைமை நோக்கி

அவ்விய மகன்று பொங்கு மழல்படு வெகுளி நீக்கி
இவ்விய லொருவற் குற்ற திற்றெனக் கிளக்க லுற்ருன். 206

வானுறை வெள்ளி வெற்பின் வாரண வாசி மன்னன்
ஊனுறை பருதி வெள்வே லுலோகமா பால னென்பான்
தேனுறை திருந்து கண்ணிச் சிறுவனுக் கரசு நாட்டிப்
பானிறக் குருகி னுய்ந்து பண்ணவர் படிவங்
கொண்டான். 207

வெஞ்சினங் குறைந்து நீங்க விழுத்தவந் தொடங்கி நோற்கும்
வஞ்சமில் கொள்கை யாற்குப் பாவம்வந் தடைந்த தாகக்
குஞ்சர முழங்கு தீயிற் கொள்கையின் மெலிந்திம் மூதூர்
மஞ்சுதோய் குன்ற மன்ன மாடவீட் டகம்பு குந்தான். 208

உரைவிளை யாமை மைந்தன் கேட்கிய வுவந்து நோக்கி
வரைவிளை யாடு மார்பன் யாரவன் வாழி யென்ன
விரைவிளை யாடுந் தாரோ யானென விரும்பித் தீம்பாற்
றிரைவிளை யமிர்த மன்ன கட்டுரை செல்க வென்ருன். 209

பூத்தின்று புகன்று சேதா புணர்முலை பொழிந்த தீம்பால்
நீத்தறச் செல்ல வேவித் தட்டவின் னமிர்த முண்பான்
பாத்தரும் பசும்பொற் ருலம் பரப்பிய பைம்பொற் பூமி
ஏத்தருந் தவிசி னம்பி தோழரொ டேறி னுனே. 210

புடையிரு குழையு மின்னப் பூந்துகில் செறிந்த வல்குல்
நடையறி மகளி ரேந்த நல்லமிர் துண்ணும் போழ்தின்
இடைகழி நின்ற வென்னை நோக்கிப் போந்தேறு கென்ருன்
கடல்கெழு பருதி யன்ன பொற்கலத் தெனக்கு மிட்டார். 211

கைகவி நறுநெய் பெய்து கன்னலங் குடங்கள் கூட்டிப்
பெய்பெயென் றுரைப்ப யானும் பெருங்கடல் வெள்ளிக்
குன்றம்
பெய்துதூர்க் கின்ற வண்ணம் விலாப்புடை பெரிதும் வீங்க
ஐயன தருளி னுல்யா னந்தணர் தொழிலே னுனேன். 212

சுரும்புண்ட யலங்கன் மாலைச் சுநந்தையுந் துணைவன் ருனும்
விரும்பின ரெதிர்கொண் டோம்ப வேழவேந் தீயி னீங்கி
இருந்தனை னேம முந்நீ ரெறிசுற வுயர்த்த தோன்றற்
கரும்புடைக் காளை யன்ன காளைநின் வலைப்பட்
டென்ருன். 213

## ஆசான் ஆனைத்தீ சீவகனைக் கண்டதும் அகறல்

நிலம்பொறுக் கலாத செம்பொ னீணிதி நுந்தை யில்லம்
நலம்பொறுக் கலாத பிண்டி நான்முகன் றமர்கட் கெல்லாம்
உலம்பொறுக் கலாத தோளா யாதலா லூடு புக்கேன்
கலம்பொறுக் கலாத சாய லவருழை நின்னைக்
கண்டேன். 214

ஐயனைக் கண்ணிற் காண யானைத்தீ யதகங் கண்ட
பையண ஞகம் போல வட்கயான் பெரிது முட்கித்
தெய்வங் கொலென்று தேர்வேற் கமிர்துலாய் நிமிர்ந்ததே
போல்
மொய்குரன் முரச நாணுந் தழங்குரன் முழங்கக்
கேட்டேன். 215

கோட்டிளந் திங்கள் சூழ்ந்து குலவிய திருவிற் போல
மோட்டொலி முத்தஞ் சூழ்ந்து முருகுகொப் புளிக்குந்
தாரோய்
கேட்டளப் பரிய சொல்லுங் கிளரொளி வனப்பு நின்னைச்
சேட்டிளஞ் சிங்க மன்னுய் சாதகஞ் செய்த வென்ருன். 216

## சீவகன் அன்பு மொழியும் ஆசான் துறவுச் சேர்தலும்

கோளியங் குழுவை யன்ன கொடுஞ்சிலை யுழவன் கேட்டே
தாளிய றவங்க டாயாத் தந்தைநீ யாகி யென்னை
வாளியங் குருவப் பூணேய் படைத்தனை வாழி யென்ன
மீளியங் களிற ஞயான் மெய்ந்நெறி நிற்ப லென்ருன். 217

மறுவற மனையி னீங்கி மாதவஞ் செய்வ லென்ருற்
பிறவற மல்ல பேசார் பேரறி வுடைய நீரார்
துறவறம் புணர்க வென்றே தோன்றரு டொழுது நின்ருன்
நறவற மலர்ந்த கண்ணி நன்மணி வண்ண னன்ஞன். 218

# 7. கம்பராமாயணம்

இந்திய நாட்டின் மிகப் பழைய இதிகாசங்களில் இராமாயணமும் ஒன்றாகும். இராம சரிதம் இந்தியாவின் மொழிகள் அனைத்திலும் பாடப்பட்டுள்ளன. எனினும், கம்பராமாயணம் தனியிடம் பெறத்தக்கது. வடமொழியில் ஆதி கவியாகிய வான்மீகி பாடிய கதையினைப் பின்பற்றியே இராமகாதையினைப் பாடியிருப்பினும் தமிழகப் பண்பு, வீரம், காதல், இலக்கிய மரபுகளைப் பயன்படுத்தித் தமிழ் மணம் கமழப் பாடிய சிறப்பு கம்பர்க்கே உரியது. இந்நூலிற்கு ''இராமாவதாரம்'' என்பதே கம்பர் சூட்டிய பெயர். பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தை காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு பெரும் பிரிவுகள் இக்காப்பியத்தில் உள்ளன. மனித உருத்தாங்கிய இராமனைப் புனிதனாகப் போற்றும் பழக்கம் இளங்கோவடிகள் காலத்திலேயே தோன்றிவிட்டது. இராமனின் கைவண்ணமும் கால்வண்ணமும் கவினுறக் காட்டப் பெறும் இக்காப்பியத்தில் ''அறம் வெல்லும் பாவம் தோற்கும்'' என்பதே உயிர்நிலைக் கொள்கையாய் ஒளிர்கிறது. ஒவ்வொரு பாத்திரத்தினையும், ஒவ்வொரு பண்பின் அடையாளமாகக் கம்பர் அமைத்துள்ளார். எடுத்துக்காட்டாக, இராமன்-கருணையின் நிலையம், சீதை-கற்பின் கனலி, பரதன்-உடன்பிறப்பு அன்பின் உருவம், வாலி-சிறியன சிந்தியாதான், அனுமன்-சொல்லின் செல்வன், கும்பகருணன்-செய்ந்நன்றி மறவாச் செம்மல், வீடணன் - நீதியின் நிலையம், இந்திரசித்து - வில்லாளரை எண்ணின் விரற்குமுன் நிற்கும் வீரன் என விளங்குதல் காணலாம். கம்பனின் காப்பியத்தினை உலக இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்த அறிஞர்கள் கம்பர் உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவர் எனப் போற்றியுள்ளனர். கம்பர் வாழ்ந்த காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

இதுகாறும் கிடைக்கக்கூடிய கம்பர் இராமாயண ஏட்டுச் சுவடிகள், பதிப்புக்கள் முதலியனவற்றை அரிதின் முயன்று ஆராய்ந்து பாடவேறுபாடுகளுடன் அரிய உரை விளக்கமும்

கண்டு கம்பர் இராமாயண வெளியீட்டினை 16 தொகுதிகளாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் கூறும் நல்லுலகிற்கு நல்கி யிருத்தல் குறிப்பிடத்தக்கது.

## பாலகாண்டம்

# நாட்டுப் படலம்

### கோசலநாட்டின் பெருமை

வாங்கரும் பாத நான்கும்
    வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத்
    தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை
    யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்று
    னென்னயான் மொழிய லுற்றேன். 1

### மருதவளம்

வரம்பெலா முத்தந் தத்து
    மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேதிக்
    குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலிப்
    பரப்பெலா மன்னம் பாங்கர்க்
கரும்பெலாஞ் செந்தேன் சந்தக்
    காவெலாங் களிவண் டீட்டம். 2

ஆறுபா யரவ மள்ள
    ராலைபா யமலை யாலைச்
சாறுபா யோதை வேலைச்
    சங்கின்வாய் பொங்கு மோசை
ஏறுபாய் தமர நீரி
    லெருமைபாய் துழனி யின்ன

மாறுமா ருகித் தம்மின்
மயங்குமா மருத வேலி. 3

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ. 4

தாமரைப் படுவ வண்டுந்
தகைவருந் திருவுந் தண்டார்க்
காமுகர்ப் படுவ மாதர்
கண்களுங் காம னம்பும்
மாமுகிற் படுவ வாரிப்
பவளமும் வயங்கு முத்தும்
நாமுதற் படுவ மெய்யு
நாமநூற் பொருளு மன்றே. 5

நீரிடை யுறங்குஞ் சங்க
நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும் வண்டு
தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை
துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம்
பொழிலிடை யுறங்குந் தோகை. 6

படையுழ வெழுந்த பொன்னும்
பணிலங்க ளுயிர்த்த முத்தும்
இடறிய பரம்பிற் காந்து
மினமணித் தொகையு நெல்லின்

மிடைபசுங் கதிரு மீனு
மென்றழைக் கரும்பும் வண்டும்
கடைசியர் முகமும் போதும்
கண்மலர்ந் தொளிரு மாதோ. 7

தெள்விளிச் சீறியாழ்ப் பாணர்
தேம்பிழி நறவ மாந்தி
வள்விசிக் கருவி பம்ப
வயின்வயின் வழங்கு பாடல்
வெள்ளிவெண் மாடத் தும்பர்
வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கட் டோகை
யின்றுயி லெழுப்பு மன்றே. 8

ஆலைவாய்க் கரும்பின் றேனு
மரிதலைப் பாளைத் தேனுஞ்
சோலைவாய்க் கனியின் றேனுந்
தொடையிழி யிறுலின் றேனும்
மாலைவா யுகுத்த தேனும்
வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் படுப்ப வுண்டு
மீனெலாங் களிக்கு மாதோ. 9

பண்கள்வாய் மிழற்று மின்சொற்
கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வா யொக்குங்
களையலாற் களைகி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்
களைகிலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால். 10

புதுப்புனல் குடையு மாதர்
பூவொடு நாவி பூத்த

கதுப்புறு வெறியே நாறுங்
கருங்கடற் றரங்க மென்றல்
மதுப்பொதி மழலைச் செவ்வாய்
வாட்கடைக் கண்ணின் மைந்தர்
விதுப்புற நோக்கு மின்னூர்
மிகுதியை விளம்ப லாமே. 11

வெண்டளக் கலவைச் சேறுங்
குங்கும விரைமென் சாந்தும்
குண்டலக் கோல மைந்தர்
குடைந்தநீர்க் கொள்ளை சாற்றின்
தண்டலைப் பரப்புஞ் சாலி
வேலியும் தழீஇய வைப்பும்
வண்டலிட் டோடு மண்ணு
மதுகர மொய்க்கு மாதோ. 12

சேலுண்ட வொண்க ணாரிற்
றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி
வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி
கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
தேரைதா லாட்டும் பண்ணை. 13

குயிலினம் வதுவை செய்யக்
கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடும்
மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம்
பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை. 14

## மக்களின் பொழுதுபோக்கு

பொருந்திய மகளி ரோடு
வதுவையிற் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றன்ன
வியலிசைப் பயன்றுய்ப் பாரும்
மருந்தினு மினிய கேள்வி
செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகங்கண் டன்ன
விழாவணி விரும்பு வாரும். 15

கறுப்புறு மனமுங் கண்ணிற்
சிவப்புறு சூட்டுங் காட்டி
உறுப்புறு படையிற் றாக்கி
யுறுபகை யின்றிச் சீறி
வெறுப்பில களிப்பின் வெம்போர்
மதுகைய வீர வாழ்க்கை
மறுப்பட வாவி பேணு
வாரணம் பொருத்து வாரும். 16

எருமைநா கீன்ற செங்க
ணேற்றையோ டேற்றை சீற்றத்
துருமிவை யென்னத் தாக்கி
யூழுற நெருக்கி யொன்றாய்
விரியிரு ளிரண்டு கூறாய்
வெகுண்டன வனைய நோக்கி
அரியினங் குஞ்சி யார்ப்ப
மஞ்சுற வார்க்கின் றாரும். 17

## உழவர் ஓதை

முள்ளரை முளரி வெள்ளி
முளையிற முத்தும் பொன்னும்
தள்ளுற மணிகள் சிந்தச்
சலஞ்சலம் புலம்பச் சாலில்
துள்ளிமீன் றுடிப்ப வாமை
தலைபுடை சுரிப்பத் தூம்பின்

உள்வரா லொளிப்ப மள்ள
ருழுபக டுரப்பு வாரும். 18

## விருந்தோம்பல்

முந்துமுக் கனியி னோடு
முதிரையின் முழுத்த நெய்யிற்
செந்தயிர்க் கண்டங் கண்ட
மிடையிடை செறிந்த சோற்றிற்
றந்தமி லிருந்து தாமும்
விருந்தொடும் தமரி னோடும்
அந்தண ரமுத ருண்டி
யயில்வுறு மமலைத் தெங்கும். 19

## நெய்தல்நிலச் சிறப்பு

முறையறிந் தவாவை நீக்கி
முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கு
மிசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்குந் தெய்வப்
பூதலந் தன்னிற் பொன்னின்
நிறைபரஞ் சொரிந்து வங்க
நெடுமுது காற்று நெய்தல். 20

## பல்வகை வளம்

எறிதரு மரியின் சும்மை
யெடுத்துவா னிட்ட போர்கள்
குறிகளும் போத்திற் கொல்வார்
கொன்றநெற் குவைகள் செய்வார்
வறியவர்க் குதவி மிக்க
விருந்துண மனையி னுய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி
நிறைத்துமண் ணெளிய வூர்வார். 21

கதிர்படு வயலி னுள்ள
கடிகமழ் பொழிலி னுள்ள
முதிர்பல மரத்தி னுள்ள
முதிரைகள் புறவி னுள்ள
பதிபடு கொடியி னுள்ள
படிவளர் குழியி னுள்ள
மதுவள மலரிற் கொள்ளும்
வண்டென மள்ளர் கொள்வார். 22

பருவ மங்கையர் பங்கய வாண்முகத்
துருவ வுண்கணை யொண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு காமுற்று வைகலும்
மருத வேலியின் வைகின வண்டரோ. 23

வேலை வென்ற வுழத்தியர் வெம்முலை
ஆலை நின்று முனிந்திடு மங்கொர்பால்
பாலை தந்த மதுப்பரு கிப்பரு
வாலை நின்று மதர்க்கு மருங்கெலாம். 24

ஈர நீர்படிந் திந்நிலத் தேசில
கார்க ளென்ன வருங்கரு மேதிகள்
ஊரி னின்றகன் றுள்ளிட மென்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே. 25

முட்டி லட்டின் முழங்குற வாக்கிய
நெட்டு லைக்கமு நீர்நெடு நீத்தந்தான்
பட்ட மென்கமு கோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலி னூறு வளர்க்குமே. 26

சூட்டு டைத்தலைத் தூநிற வாரணம்
தாட்டு ணைக்குடை யுந்தகை சான்மணி
மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்
கூட்டி னுய்க்குங் குருவிக் குழாமரோ. 27

தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளல்போய்
மாய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கைய ரங்கை வருந்துவார். 28

குற்ற பாகு கொழிப்பன கோணெறி
கற்றி லாத கருங்க ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலில்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே. 29

துருவை மென்பிணை யீன்ற துளக்கிலா
வரிம ருப்பிணை வன்றலை யேற்றைவான்
உருமி டித்தெனத் தாக்குறு மொல்லொலி
வெருவி மால்வரைச் சூன்மழை மின்னுமே. 30

## திணை முதலியவற்றிலிருந்து ஒலிப்பன இவையெனல்

திணைச்சி லம்புவ தீஞ்சொலி ளங்கிளி
நணைச்சு லம்புவ நாகிள வண்டுபூம்
புணைச்சி லம்புவ புள்ளினம் வள்ளியோர்
மணைச்சி லம்புவ மங்கல வள்ளையே. 31

## திணை மயக்கம்

கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம்
வன்றொ டர்ப்படுக் கும்வன வாரிசூழ்
குன்று டைக்குல மள்ளர் குழூஉக்குரல்
இன்று ணைக்களி யன்னமி ரிக்குமே. 32

வள்ளி கொள்பவர் கொள்வன மாமணி
துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி
புள்ளி கொள்வன பொன்விரி புன்னையிற்
பள்ளி கொள்வன பங்கயத் தன்னமே. 33

கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலில்
கன்று றக்குங் குரவை கடைசியர்
புன்ற லைப்புனங் காப்புடை போதரச்
சென்றி சைக்கு நுளைச்சியர் செவ்வழி. 34

சேம்பு கால்பொரச் செங்கழு நீர்க்குளத்
தூம்பு காலச் சுரிவளை மேய்வன
காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே. 35

## பெண்டிர்ச் சிறப்பு

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே. 36

## பல்வகை வளம்

பிறைமு கத்தலைப் பெட்பினி ரும்புபோழ்
குறைக றித்திரள் குப்பைப ருப்பொடு
நிறைவெண் முத்தினி றத்தரி சிக்குவை
உறைவ கோட்டமி லூட்டிடந் தோறெலாம். 37

கலஞ்சு ரக்கு நிதியங்க ணக்கிலா
நிலஞ்சு ரக்கு நிறைவள நன்மணி
பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதம்
குலஞ்சு ரக்கு மொழுக்கங் குடிக்கெலாம். 38

## நாட்டவர் நல்லொழுக்கம்

கூற்ற மில்லையோர் குற்றமி லாமையாற்
சீற்ற மில்லைத்ஞ் சிந்தையிற் செவ்வியால்
ஆற்ற னல்லற மல்லதி லாமையால்
ஏற்ற மல்லதி ழிதக வில்லையே. 39

நெறிக டந்துப ரந்தன நீத்தமே
குறிய ழிந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயும ருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே. 40

## பல்வகைப் புகை

அகிலி னிடும்புகை யட்டிலி டும்புகை
நகலி னாலை நறும்புகை நான்மறை
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி முழங்கின வெங்கணும். 41

## கவின்மிகு காட்சி

இயல்புடை பெயர்வன மயின்மணி யிழையின்
வெயில்புடை பெயர்வன வெறியலர் குழலின்
புயல்புடை பெயர்வன பொழிலவர் விழியின்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி. 42

இடையிற மகளிர்க ளெறிபுனன் மறுகக்
குடைபவர் துவரித ழலர்வன குமுதம்
மடைபெய ரனமென மடநடை யளகக்
கடைசியர் முகமென மலர்வன கமலம். 43

விதியினை நகுவன வயில்விழி பிடியின்
கதியினை நகுவன வவர்நடை கமலப்
பொதியினை நகுவன புணர்முலை கலைவாழ்
மதியினை நகுவன வனிதையர் வதனம். 44

பகலினொ டிகலுவ படர்மணி மடவார்
நகிலினொ டிகலுவ நனிவள ரிளநீர்
துகிலினொ டிகலுவ சுதைபுரை நுரைகார்
முகிலினோ டிகலுவ கடிமண முரசம். 45

காரொடு நிகர்வன கடிபொழில் கழனிப்
போரொடு நிகர்வன பொலன்வரை பணைசூழ்
நீரொடு நிகர்வன நிறைகட னிதிசால்
ஊரொடு நிகர்வன விமையவ ருலகம். 46

## நெய்தல் வளம்

நென்மலை யல்லன நிரைவரு தரளம்
சொன்மலை யல்லன தொடுகட லமிர்தம்
நன்மலை யல்லன நதிதரு நிதியம்
பொன்மலை யல்லன மணிபடு புளினம். 47

## கலை வளம்

பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம். 48

## மக்கள் வளம்

கோகில நவில்வன வளையவர் குதலைப்
பாகியல் கிளவிக ளவர்பயி னடமே
கேகய நவில்வன கிளரிள வளையின்
நாகுக ளுமிழ்வன நகைபுரை தரளம். 49

பழையர்த மனையன பழநறை நுகரும்
உழவர்த மனையன உழுதொழில் புரியும்
மழவர்த மனையன மணவொலி யிசையின்
கிழவர்த மனையன கிளைபயில் வளையாழ். 50

கோதைகள் சொரிவன குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன வுறையறு மமுதம்
காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள். 51

இடங்கொள் சாயல்கண் டிளைஞர் சிந்தைபோல்
தடங்கொள் சோலைவாய் மலர்பெய் தாழ்குழல்
வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடும்
தொடர்ந்து போவன தோகை மஞ்ஞைகள். 52

வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லை பொய்யுரை யிலாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால். 53

எள்ளு மேனலும் மிறுங்குஞ் சாமையும்
கொள்ளும் கொள்ளையிற் கொணரும் பண்டியும்
அள்ள லோங்களத் தமுதின் பண்டியும்
தள்ளு நீர்மையிற் றலைம யங்குமே. 54

உயருஞ் சார்விலா வுயிர்கள் செய்வினைப்
பெயரும் பல்கதிப் பிறக்கு மாறுபோல்
அயிருந் தேனுமின் பாகு மாயநூர்த்
தயிரும் வேரியுந் தலைம யங்குமே. 55

கூறு பாடலுங் குழலின் பாடலும்
வேறு வேறுநின் றிசைக்கும் வீதிவாய்
ஆறு மாறும்வந் தெதிர்ந்த வாமெனச்
சாறும் வேள்வியும் தலைம யங்குமே. 56

## உழவர் ஓதையின் உயர்வு

மூக்கிற் றுக்குறு மூரி நந்துநேர்
தாக்கிற் றுக்குறும் பறையுந் தண்ணுமை
வீக்கித் தாக்குறும் விளியு மள்ளர்தம்
வாக்கிற் றுக்குறு மொலியின் மாயுமே. 57

# குறிப்பு

## பட்டினப்பாலை

1. வெண்மீன் — வெள்ளி; மழைக்கோள் (பதிற். 24:24). இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
3. துளி - மழைத்துளி;
4. புள் - வானம்பாடி.
5. பொய்யா - தப்பாமல்; செய்யா என்னும் வாய்பாட்டு எதிர்மறை வினையெச்சம்.
6. மலை - குடகுமலை. மலையில் தோன்றிக் கடலில் கலக்கும் எனக் காவிரியின் முதலும் முடிவும் கூறினார்.
7. புனல்பரந்து பொன் கொழித்தலின் பொன்னி காவிரிக்குக் காரணக் குறியாயிற்று.
10. தெறுவின் - சுடுதலினால்,
11. செறு - வயல்
14. மோடு - வயிறு, எருமையிளங் கன்றினைக் குழவி எனல் மரபு (தொ. மரபு நூ. 20).
15. கோள் - கொத்து.
17. காய்க்கமுகு - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை,
18. இணர் - குலைகள் ; பெண்ணை - பனை
22. உணங்குணா - வினைத்தொகை. உணா - நெல்; உணங்கு - உலருகின்ற.

20-25. முன்றிலில் உணங்கும் நெல்லினைக் கவரும் கோழியை மடவார் எறிந்த பொற்குழைகள் மழமகார் உருட்டும் சிறு தேரின் வழி முன்னைத் தடுக்கும் என்றது மருத நிலத்தாரின் வளன்குறித்தவாறு.

23. கனங்குழை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.
27. கொழும்பல்குடி - பண்புத்தொகை, பாக்கம் - கடற்கரையூர்கள்.
29. கொள்ளை - விலை.
30. பஃறி - படகு; ஓடமுமாம்.
32. படப்பை - நெய்தல் சார்ந்த தோட்டம்; யாணர் - புது வருவாய்.
33. தண்டலை - பூஞ்சோலை.

34-38 கோயிலும் பொய்கையும் மதிசேர்ந்த மக வெண்மீன் போன்றன.

39. இரு காமத்திணையேரி - இம்மையிலும் மறுமையிலும் காம வின்பம் நல்குதற்கு ஏதுவாகிய இரண்டு ஏரிகள் (சிலம்பு 9:59-62).
43. நிலைஇய - நிலைபெற்ற; பெயரெச்சம், சொல்லிசையளபெடை.
44. வாக்கிய - வடித்த.
52. பகட்டெருத்து - பெரிய எருத்து என்றார் நச்சினார்க்கினியர். 'நல்லானொடு பகடோம்பியும்' எனப் பின்னரும் வருதலானும் 'மடுத்தவாயெல்லாம் பகடன்னான்' என

வள்ளுவர் வழங்குதலானும் பகடாகிய எருத்து எனப் பண்புத்தொகையாகக் கூறலும் ஒன்று.
52. சாலை - வைக்கோலிடும் சாலைகள்; ஆனிலைகளும் ஆம்.
53. தவப்பள்ளி - அமண் பள்ளி, பௌத்தப் பள்ளிகள்.
54. அங்கி-ஓமகுண்டத்தீ.
55. முனைஇ-வெறுத்து; இறந்தகால வினையெச்சம், சொல்லிசையளபெடை.
57. கடிநகர்-காளிகோட்டம்.
58. தூதுண் அம்புறவு - கல்லைக் கோதும் அழகிய புறுக்கள்; துச்சில் - கூடு; குடியிருப்பு.
59. முரண் களரி - போர்க்களம்.
60. திட்டை - மேடு.
62. கருந்தொழில் - வலிய வினை; கலிமாக்கள்-பரதவர் பிள்ளைகள்.
63. இறவு - இருல்மீன்;
65. அடும்பு-அடப்பங்கொடி.
70-72. மற்போர், கருவிப் போர் புரியும் வீரர்திறம் கூறியவாறு.
74. போந்தை-பனை.
75. பறழ் - குட்டிகள்.
77. மேழகத்தகர் - யாட்டுக்கிடாய் சிவல் - கவுதாரி.
78. கிடுகு - கவசம்; மெய்ம்மறை; எஃகு - வேல்.
80. காழ் - காம்புகள்.
85. வெண்கூதாளம் - வெண்டாளி.
87. அணங்கு - கடற்றெய்வம்
89. பிணர் - சருச்சரை; பெண்ணைப்பிழி - பனங்கள்.
90. புன்றலை - சிவந்ததலை.
92. வேட்டம் -மீன்வேட்டை
95. கொண்மூ - செக்கர்மேகம்.
97. புணரி - கடல்.
98. கூடல் - யாறு கடலில் கூடும் இடம்; புகார் என்பதும் அது.
99. கடலாடின் தீவினை தீரும் என்பது நம்பிக்கை "கங்கையாடிலென்" என வரும் அப்பர் பாடல் காண்க.
100. மாசு - உப்பு.
101. அலவன் - நண்டுகள்; உழக்கியும்-விளையாடியும்.
104. துறக்கம் - இன்பவுலகம்; ஏய்க்கும் - போலும்.
105. பொய்யா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
107. புணர்ச்சிக் காலத்துக்கு நொய்யவாகிய துகிலணிந்து.
108. மட்டு - கள்; மது - காமபானம்.
112. திமில் - படகு.
115. அடைஇய - துயின்ற; பெயரெச்சம் [சொல்லிசையளபெடை.
116. மாஅகாவிரி - செய்யுளிசை நிறையளபெடை; இன்னிசையளபெடையுமாம்.
121. தொழின்மாக்கள் - சுங்கங்கொள்வோர்.
125. உலகு - சுங்கம்
135. புலி-புலியிலச்சினை; தானியாகுபெயர்.
138. சிமையம் - சிகரம்.
கவாஅன் - பக்கமலை.
141. ஏழகத்தகர் - யாட்டுக்கிடா; இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
143. தகைப்பின்-கட்டுக்களின்
144. புழை - சிறுவாசல்.
146. குறங்கு - தொடை.

148. துகிர்மேனி – பவழம்போலும் நிறம்; உவமைத் தொகை.

151. வெளிநுழையும் வாய் - சாளரம்; பலகணி, காலதர்.

155. தாஅய் - தாவி; இறந்த கால வினையெச்சம். இசை நிறையளபெடை

158. ஆவணம் - அங்காடி.

163. மஞ்சிகை – பெட்டி

164. பணியம் - தின்பண்டம் பண்ணியம் என்பதன் இடைக்குறை.

171. உறழ் - கருத்து மாறுபாடு.

172. வெளில் – கட்டுத்தறி.

175. கூம்பு - பாய்மரம்.

176. விடக்கு - இறைச்சி.

179. புதவு - வாசல்.

186. கால் - சகடம்.
கறி - மிளகு முதலியன.

187. வடமலை - இமயம்; வேங்கடமுமாம்.

188. குடமலை - குடகுமலை.
ஆரம், அகில் என்பன சந்தன விசேடம்.

190. வாரி - வருவாய்.

191. காழகம் - கடாரநாடு.

193. நனந்தலை - உரிச்சொற்றொடர்.

198. குரம்பை - குடிசை.

203. பதம் – சோறு.

206 – 207. வணிகர் நடுநிலைமைக்கு உழவர் நுகத்தடியின் நடுஆணி உவமை கூறப்பட்டது.

210. கொள்வதூஉம், கொடுப்பதூஉம் - இன்னிசையளபெடைகள்.

212. கொண்டி - கொண்டிப் பொருள்; வருவாய்.

215. சாறு – விழா.

218. முட்டா -ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்;

218. பெறினும் - செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்;

221. கொடுவரிக் குருளை -புலிக்குட்டி; கொடுவரி – அன்மொழித்தொகை.

225. நண்ணார் - பகைவர்

227. தாயம் -ஆட்சியுரிமை.

235. உழிஞை -மதிலழிப்போர் சூடும் இலச்சினைப்பூ.

242. கராஅம் - முதலை; செய்யுளிசை நிறையளபெடை.

245. இரலை - கலைமான்.

246. கொண்டி மகளிர் - பகைப் புலத்துக்கொள்ளப்பட்டுக் கடவுட்பணிபுரியும் பெண்டிர்.

249. கந்து - இலிங்கத்தின் பழைய வடிவம் என்பர்.

253. கோடியர் - கூத்தர்

255. பேஎம் - அச்சம்.

257. கதிர்ப்ப - ஓசைஎழுப்ப,

262. ஆறு - குறையாத.

271-272. அகழ்க்குவன், தூர்க்குவன், வீழ்க்குவன், மாற்றுவன், என்பன தன்மையொருமை வினைமுற்று. -அல் விகுதி - அன்விகுதியாக வழங்குதல் காண்க.

274. ஒளியர் - ஒளிநாட்டவர். பணிபு - செய்பு வாய்பாட்டு வினையெச்சம். சேனாவரையர் நிகழ்காலத்தில் வரும் என்ற கருத்தினர்; ஆயின் இறந்தகாலம் உணர்த்துகிறது என்க.

275. அருவாளர் - தமிழகத்தைச் சேர்ந்த கொடுந்தமிழ் நிலங்களில் ஒன்றாகிய அருவா, அருவா வடதலை நாட்டினர்.

281. பொதுவர் - இடைக்குலக் கோன்; குறும்பர்.

285. போக்கி - விரிவுபடுத்தி.

287. புழை - சிறுவாயில்.

288. ஞாயில் - எயில்
புதை - அம்புகள்.

294. பரேரெறும் - பரு+ஏர்+எறும்; பருத்த அழகிய வலிய.

298. அரிமா - சீயம்.

300. வெய்ய - வெம்மையுடையன.

301. தண்ணிய - தண்மை பொருந்தியன. வெய்ய, தண்ணிய - படர்க்கைப் பன்மைக் குறிப்பு வினை முற்று.

## கலித்தொகை

I

1. வேனில் - முதுவேனில்; கோடைக்காலம்;

2. வான் - மழை; 'வான் சிறப்பு' என வருதல் காண்க.
தேர் - பேய்த்தேர்; கானல்நீர்.

4. உசாவுகோ - உசாவட்டுமா? தன்மையொருமை வினைமுற்று; ஓகாரம்வினு விடைச் சொல்.

5. யாழ - அசைநிலை

6. உளர்தியென்னும் முன்னிலைவினை விகாரத்தால் நீண்டது.

7. மண்டிலம் – திங்கள்
மை - மேகம்.

9. காழகம் - ஆடை

10. மரீஇய - பொருந்திய சொல்லிசை யளபெடை.

12. இனைநோக்கு - வருந்தும் பார்வை, வினைத் தொகை.

15. வீ - மலர்.

16. இறை - முன்கை.

18. நவை – குற்றம்

20. இன்னுயிர் – இன்பமும் உயிரும் என உம்மைத் தொகையாகக் கொள்வர் நச்சினர்க்கினியர்.

II

1. ஒரீஇ - நீங்கி, சொல்லிசையளபெடை.

2. கனன்று காயும் கதிரவனின் வெம்மைக்குக் காவலனின் கொடுங்கோன்மை உவமை.

4. கடாம் - மதம்.

5. நாஞ்சில் – கலப்பை.

6. வெஞ்சுரம்-கொடிய பாலை வழி, பண்புத்தொகை.

7. இறப்ப - செல்ல.

8. ஐஇய - தலைவனே; செய்யுளிசை நிறையளபெடை, அண்மை விளி.

9. வீழுநர்க்கு - விரும்புவார்க்கு,
இறைச்சி - நேயம்.

12. கொண்டக்கால் - பெயரெச்சம் எனக் கொண்டார் நச்சினர்க்கினியர்; காலீற்று வினையெச்சமாகக் கொள்ளுதல் சாலும், பெயரெச்சத்தின்கண் வல்லொற்று மிகாதாகலின் என்க.

17. அரைசு – இடைப்போலி.

22. நகர் - ஆகுபெயராய் மனைவியை யுணர்த்துகிறது
'இல்' போல.

## III

2. கரகம் - கமண்டலம்
3. சுவல் - தோள்
4. நடை - ஒழுக்கம். அந்தணீர் (4), பெரும (8) என்ற தொடர் ஒருமைப் பன்மை மயக்க வழுவமைதி.
12. நறுஞ்சாந்தம் - மணம் மிக்க சந்தனம்; பண்புத் தொகை.
16. நீர் - கடல்நீர்.
17. அனையள் - குறிப்புவினை முற்று.
18. முரல்பவர்க்கு - பாடுவார்க்கு.
22. இறந்த - மிக்க என்றார் நச்சினார்க்கினியர்; உடன்போக்கிற் சென்ற எனினுமாம். எவ்வம் - வருத்தம்.
23. சிறந்தானை - இருமுதுகுரவரினும் சிறந்த கணவனை வழிபடீஇ - வழிபட்டு; சொல்லிசையளபெடை.

## IV

1. வாடிய சினையவாய் - தளிர்கள் வாடின. கொம்புகளையுடையவாய்.
3. இகந்துசெய்து - உலகவொழுக்கத்தைக் கடந்து தீங்கு செய்து.
5. அலவுற்று - அலக்கணுற்று, வருத்தமுற்று. வெஃகி - வாங்கிக் கொண்டு.
8. பொருள்வயினிறத்தி - பொருளீட்டப் பிரிகிறாய்.
9. ஒளியோடற்பாள் - ஒளி கெடுவாள்.
11. புலம்பு - தனிமை இனைபவள் - வருந்துபவள்.
13. படர் - துன்பம் கூர்கிற்பாள் - மிகுவாள்.
14. சாயலாள் - மென்மையையுடையவள் நகையாக - விளையாட்டாக.
15. கலுழ்பவள் - கலங்குபவள்
18. ஈரத்தின் - அன்பின்.
21. வெஃகி - விரும்பி.
23. நெடுந்தகை - தலைவன், பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.
24. ஆல் - அசை. செறிக - வியங்கோள்.

## V

1. அருளியோர்க்கு - அந்தணர், தாபதர் முதலியோர்க்கு
2. பேணுரை - பகைவரை தெறுதலும் - அழித்தலும்.
5. வயங்கிழாஅய் - தோழியே! வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. வலிப்பல் (வரவினைத்) துணிவேன்; தன்மையொருமை வினைமுற்று.
8. துடியடி - துடிபோலும் அடி, உவமைத்தொகை. கயந்தலை—யானைக்கன்று.
10. இகந்து - நீங்கி உலவை - காய்ந்தகிளை, கொம்புகள்.
13. சிறகர் - இறக்கை, அர் ஈற்றுப்போலி
16. பிணை - பெண்மான் கலை - ஆண்மான்.
21-22. பல்லி பாங்கொத்திசைத்தலும், பெண்டிர்க்கு இடக்கண் துடித்தலும் நன்மை பயக்கும் என்பது நம்பிக்கை.

# புறநானூறு

## திணை, துறை விளக்கம்

1. காஞ்சித்திணை (1, 2, 3):- நிலையாமை பொருளாக வருவது.
வஞ்சினக் காஞ்சித்துறை (1, 2, 3):- இன்னவாறு செய்தலைப் பிழைத்தேனாயின் இன்னேன் ஆகக் கடவேன் எனக் கூறுதல்:
''இன்னது பிழைப்பின் இது வாகியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்''
(தொல். புறத். 77:8-9)
2. பொதுவியல் (4, 5, 6, 7):- வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாய் உள்ளனவும் அவற்றுள் கூறு தொழிந்தனவும் ஆகிய பொருள்களைக் கூறுவது. இத்திணை பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்களில் கூறப்பட்டது.
முதுமொழிக்காஞ்சி (4):- நிலையாமையினை நினைவுறுத்தி அறிவான் மிக்கோர் பிறர்க்கு உணர்த்திய அறிவுரை.
''கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்''
(தொல். புறத். 77·2)
பொருண்மொழிக்காஞ்சி (5, 6, 7):- இருமைக்கும் உறுதிபயக்கும் அறமுரைத்தல்.
3. பாடாண்டிணை (8, 9):- பாடுதற்குரிய சிறந்த ஆண்மகனின் புகழ், வலி, கொடை, அளி முதலிய பண்புகளைப் பாராட்டுவது.
இயன்மொழி: (8, 9) தலைமகனின் இயல்பினைப் பாராட்டுதல்.

செய்யுள் 1.
1. மடங்கல் - சிங்கம்;
சினை இ - சினந்து; சொல்லிசையளபெடை.
4. ஆரமர் - பொறுத்தற்கரிய போர்; பண்புத்தொகை.
6. பிரிக - வியங்கோள் தன்மைக்கண் வந்தது.
பாண்டியனின் கற்புள்ளம் போதரும்.
9. மெலிகோல் - கொடுங்கோல்.
11. பொய்யா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்,
யாணர் - புதுவருவாய்.
18. தென்புலம் - பாண்டி நாடு.
19. பிறக்கு - தன்மையொருமை வினைமுற்று.

செய்யுள் 2.
1. மீக்கூறுநர் - மிகுத்துச் சொல்லுவோர், பாராட்டுவோர்.
2. உளைய - வெறுப்ப.
3. பாவடி - பரந்தவடி, வினைத்தொகை.
6. உறுதுப்பு - மிக்கவலிமை; உரிச்சொற்றொடர்.
9. அகப்படேஎனாயின் - கைக்கொண்டிலேனாயின்
18. இன்மை - வறுமை.

செய்யுள் 3.
1. நல்லடி - பெருமிதம்பற்றித் தனனடியை நல்லடி என்றான்.
3. தஞ்சம் - எளிமை.
6. மடவோன் - அறிவிலி.

7. சிதடன் - குருடன்.
8. உய்ந்தனன் - தப்பித்தவனாகி, முற்றெச்சம்.
13. மகளிர் - பொதுமகளிர்
14. குழைக - துவள்க; வியங்கோள் தன்மைக்கண் வந்தது.

செய்யுள் 4
1. இறப்பினும் - இறந்து பிறந்தாலும்
ஊன்றடி - ஊன்பிண்டம், மணை.
3. தொடர் - சங்கிலி
ஞமலி - நாய்
4. கேளல் கேளிர் - சிறைக் கோட்டங் காப்போர்.
சிறுபதம் - தண்ணீர்.
7. ஈன்மரோ - பெறுவார்களோ; ஓகாரம் எதிர்மறை.

செய்யுள் 5
2. பால் - விதி,
தாயம் - அரசுரிமை.
5. சிறியோன் - உள்ளஞ் சிறியோன், குறிப்புவினையாலணையும் பெயர்.
மன் - ஆக்கப்பொருளில் வந்தது.
6. பரிக்கும் - பொறுக்கும்;
மதன் - மனவெழுச்சி, வலிமை.
8. அறுகயம் - வற்றிய தடாகம், வினைத்தொகை.
வெண்கிடை - வெளிய கிடேச்சு; நெட்டி.
9. என்றூழ் - ஞாயிறு, ஆகுபெயராய்க் கோடைக்காலம் உணர்த்திற்று.
12. முரசுகெழு வேந்தர் - கெழு சிறிது பொருள் பயப்பநின்ற சாரியை என்பர் அடியார்க்கு நல்லார் (சிலம்பு. பதிகம் ).

செய்யுள் 6
1. பதம் - செவ்வி;
சீறிடம் - பண்புத்தொகை
2. வல்சி - உணவு.
அளை - வளை.
4. ஊளமிலாளர் - ஊக்கம் இல்லாதவர்.
5. இல்லாகியர் - இல்லையாக, வியங்கோள்.
6. கேழல் - பன்றி.
9. களிற்றெருத்தல் - ஆண் யானை, பண்புத்தொகை.
12. வைகல் - நாட்கள்.

செய்யுள் 7
1. நல்வினை - நற்செயல்கள்.
2. கசடு - குற்றம், அழுக்கு.
5. குறும்பூழ் - காடை, கவுதாரி.
8. தொய்யாவுலகம் - இருவினையும் செய்யப்படாத இன்பவுலகம்.
11. மாறிப்பிறவாரென்று சொல்லுபவர் உலோகாயதர்.
12. கோடு - உச்சி, சிகரம்.
8-11 - இவ்வடிகளில் அந்தாதித் தொடை அமைந்திருத்தல் காண்க.

செய்யுள் 8
1. வாக்கல் - வடிக்கப்பட்ட சோறு.
2. மறுகு - தெரு.
4. ஆய்மகள் - இடைமகள்;
புளிமிதவை - புளிங்கூழ்.
7. ஓம்புநன் - பாதுகாப்போனை, வினையாலணையும் பெயர்.
9. நில்லலன் - நில்லான்;
மன் - அசைநிலை.

செய்யுள் 9
1. மாத்திரை - அளவு.
2. வழுவின்று - கறையின்றி,
கிழமையர் - உரிமை கொண்டாடும் நட்பினர்.

6. யாத்த நண்பினன் - நெஞ்சம் பிணித்த கேண்மையன்; பிசிராந்தையார்.
10. அதன்றலை - அதற்கு மேலே.

## நாலடியார்

### கல்வி

1. குஞ்சி - ஆடவர் முடி; தானை - புடவை.
நல்லம் - தன்மைப்பன்மைக் குறிப்பு வினைமுற்று.
2. இம்மை - இப்பிறப்பில்; ஈயக்குறைவின்றால் - கொடுக்கக் குறையாது. ஆல் அசை.
மம்மர் - அறியாமை என்னும் நோய்.
அறுக்கும் - செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்.
3. விழுமிதா - விழுப்பம் உடையதாக; ஆக என்பது 'ஆ' என நின்றது, செயவென்னெச்சம்.
விளைநிலம் - மருதவயல்.
4. கோட்படா-கவரப்படாது விச்சை - வித்தை, கல்வி
5. கரை - எல்லை.
இல -பலவின்பாற் குறிப்பு முற்று.
பாலுண்குருகு - அன்னப் பறவை என்ப.
6. கொளல் - கொள்க; வியங்கோள்.
7. தவலரும் - கெடாத.
எஃகு - நுண்மை.
குழீஇ - குழுமி, சொல்லிசையளபெடை.
8. சேர்ப்ப - நெய்தல்நிலத் தலைவன்; அண்மைவிளி, ஆடூஉ முன்னிலை.
தூர் - வேர், அடிப்பகுதி.
9. ஆங்கு-போல, உவமவுருபு
10. அறிவுநூல் - மெய்யறிவு புகட்டும் தத்துவ நூல்கள் உலகநூல் - உலகியல் வாழ்விற்கு மட்டுமே பயன்தரும் நூல்கள்.
கலகல - ஒலிக்குறிப்பாய் வெற்றாரவாரம் என்னும் பொருட்டு.
கூஉம் - கூவும், செய்யுளிசை நிறையளபெடை.
போஓம்-போகும், செய்யுளிசை நிறையளபெடை.

### குடிப்பிறப்பு

1. அழிந்தக் கண்ணும் - வினையெச்சம்.
அரிமா - சிங்கம். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்ற கருத்து இப் பாடலில் காண்க.
2. மை - முகில்,
வெற்ப - மலைத்தலைவன், ஈண்டு ஆடூஉ முன்னிலை, அண்மைவிளி.
3. பாற்று - பாலது, குறிப்பு வினைமுற்று.
4. ஊதியம் - பெறுதி, இலாபம்.
புணரும் - பொருந்தும்.
5. மாணா - சிறப்பில்லாத, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
6. கனமணி-பொன்னும்மணியும்; உம்மைத்தொகை.
7. சிதல் - செல், கறையான் உழந்தக்கடைத்தும் - வினையெச்சம். "செய்வர் செயற்பாலவை" என்ற ஈற்றடியுடைய மூன்று வெண்பாக்கள் நாலடியாரில் உள்ளன.
8. புடை - பக்கம்,
ஒல்கார் - தளரமாட்டார்.
9. பாய்பரி - வினைத்தொகை
10. தெண்ணீர் - தெளிந்த நீர்; பண்புத்தொகை.

## சிலப்பதிகாரம்

## ஆய்ச்சியர் குரவை

1. 2. புலியும் வில்லும் என்றது சோழனையும் சேரனையும்.
10. இடைமுதுமகள் - மாதரி
2. 1. இமிலேறு - முரிப்பையுடைய காளை.
3. 2. மறி - ஆட்டுமறிகள்.
4. 1. நான்முலை - தொங்கும் மடியெனின் வினைத் தொகை; நான்காகிய முலையெனின் பண்புத் தொகை,
2. மால்மணி - பெரியமணி. உரைப்பாட்டுமடையில் குறித்த செய்திகளையே 'கருப்பம்' என்ற பகுதியில் தொகுத்துச் சுட்டி வருவதோர் துன்பத்திற்குக் காரணமாக்கினார்.
5. தம்முன் - பலதேவர்; பின்னை - நப்பின்னை
கறவைக்கன்று - உம்மைத் தொகை.
6. கொளு - குரவைக் கூத்திற்குக் கருத்தாகக் கொளுத்தப்படுவது.
கதன் - சீற்றம்;
அஞ்சான் - முற்றெச்சம், அஞ்சானாய்.
7. செகில் - செந்நிறக்காளை
9. வெள்ளை - பண்பாகுபெயராய் வெண்காளையைச் சுட்டும்.
13. 7. படைத்துக்கோட் பெயர் - இனி ஆளுதற்காக இட்ட இடுகுறிப் பெயர் என்பர் அடியார்க்கு நல்லார்.
8. குடமுதல் - மேற்றிசை முதலாக.

14, 15, 16: ஆயர்குலத்துப் பெண்டிர் எழுவர்க்கும் ஏழு நரம்பின் பெயர்சூட்டி அவர்களை நரம்புநிற்கும் நிலைகளிலே நிறுத்தினாள் முதுமகளாகிய மாதரி.
மாதரி பின்னையின் பாத்திரமாகத் தன்னை நிறுத்தி வியந்தாள் என்பார் ''ஐயென்றாள் ஆயர்மகள்'' என்றார்
17. செந்நிலை - சமநிலை; கற்கடகம் - நண்டு,
18. குரல்மந்தமாக - குரலென்னும் நரம்பு மந்தசுரமாக இளிசமனாக - இளியென்னும் நரம்பு சமசுரமாக துத்தம்வலியா - துத்தம் என்னும் நரம்புவலிசுரமாக (அடி. நல்).
19. குணில் - குறுந்தடி கேளாமோ - கேட்போம்.
20. ஆம்பல் - இசைக்கருவி, பண்ணுமாம் என்பர் அரும்பதவுரைகாரர்; கருவியே என்பர் அடியார்க்கு நல்லார்.
23. நுடங்க - அசைய; அறுவை - துகில்.
24. நிறை - அழகு
25. கலை - ஆடை
26. ஒன்றன்பகுதி - ஒற்றைத் தாளத்தின் கூறு என்பர் அரும்பத உரைகாரர். திகிரியான் - சக்கரத்தால்
27. எருத்து - புறக்கழுத்து கயில் - சிறுபுறம் உளர்வார் - வாசிப்பார், மீட்டுவார்.
28. புள்ளூர்கடவுள் - கருடனையூரும் திருமால்; பாணி - பாட்டு.
29, 30, 31: மலை - பொதியின் மலை. உள்வரி வாழ்த்துப்

பகுதியில் பாண்டியன், சோழன், சேரன் மூவரின் சிறப்பும் குறிக்கப்பெறுதல் காண்க.
கன்னவில் தோள் - கல் போன்ற தோள்,
நவில் - உவமையுருபு.
32. கடல்வண்ணன் - அண்மை விளி; கண்ணனே!
33. உறுபசி - உரிச்சொற்றொடர், மிக்கபசி;
துழாய் - துளசி.
34. மடங்கல் - நரசிங்கம்.
35. சேவடி - பண்புத்தொகை செம்மை+அடி.
சேவகன் - வீரன்.
36. உந்தி - கொப்பூழ்; செய்ய கரியவன் என்றது முரணணி.
37. தாழும் - தங்கிய
ஆரணம் - மறை.
38. வேத்தர் - வேந்தர்; வலித்தல் விகாரம்,
அரச வாழ்த்துடன் குரவைக் கூத்துமுடிதல் எளிய ஆயர்குலப் பெண்டிர்க்கிருந்த நாட்டுப்பற்றினைப் புலப்படுத்தும்.

## துன்பமாலை

2. முதுமகள் - மாதரி;
சாயலாள் - ஐயை.
9-10: சொற்பொருள் பின்வரு நிலையணி.
11. எல்லாவோ - எல்லா, கெழுதகைப் பொதுச்சொல்; முன்னிலைப்படுத்துவது.
ஓ - இரக்கக் குறிப்பு.
12. காதலற் காண்கிலேன் - இரண்டாம் வேற்றுமைத் தொகை;
காதலன் - கோவலன்.
13. ஊதுலை - துருத்தி, தோழீ என்றது ஐயையினை
17. அலவும் - வருந்தும்.
23. எஞ்சலார் - ஏதிலார், அயலார்.
25. ஞெகிழம் - சிலம்பு.
30-31: பொழிகதிர்த் திங்கள் கண்ணீர்வடியும் கண்ணகியின் முகத்திற்கும் முகில் கலந்த அவள் கூந்தற்கும் உவமை.
33. எங்கணுஅ - எங்குற்றாய்.
36. அலர் - அவதூறு,
38. நறை - தேன், ஆகுபெயராய் மாலையை உணர்த்திற்று.
40. மறன் - கொடுங்கோன்மை
45. இசை - புகழ்.
46. காணிகா - காண்பாயாக; இகவென்னும் முன்னிலையசை இகாவென்று திரிந்தது.
48. கேட்டீமின் - அருள்கூர்ந்து கேண்மின்; ஏவல்பன்மை.
கேட்டைக்க - கேட்பீராக; வியங்கோள்.
53. ஒருகுரல் - அசரீரியின் சொல்.

## ஊர்சூழ்வரி

1. தோளி - கண்ணகி.
4. ஈதொன்று - இஃது ஓர் அநியாயம்.
6. உறுதது - பிறர் அனுபவியாத துயர்.
14. எள்ளல் - எள்ளுக, வியங்கோள்.
16. மல்லல் - வளம்
19. மதிக்குடை - உவமைத் தொகை.
20. கொற்றம் - அரசியல்.
22. தண்குடை வெம்மை விளைத்தது எனல் நிகழாதது நிகழ்ந்தது என்னும் பொருட்டு.
24. பெருந்தெய்வம் - கற்புடைத் தெய்வம் ஆகிய கண்ணகி.

27. ஆற்றவும் - மிகவும் என்றூர் அடியார்க்குநல்லார்; அரற்றவும் என்பதும் பாடம்.
29. கம்பலை மாக்கள் - வேறு சில காட்சி கண்டு திரியுமவர்.
32. சுருங்கி - சுருக்கி, மெலித்தல் விகாரம்
37. புண்தாழ்குருதி - புண்ணினின்றும் குதிக்கும் குருதிப் புனல்.
40. உறு - போன்ற, உவமை உருபு. நறுமேனி என்றது கொலையுண்டு கிடந்த கோவலனை.
46. ஈர்வது - வெட்டுவது.
52. கொழுநர்-கொடிக்குக் கொழுவைப்போல் நங்கைக்குக் கணவனுதலின் கொழுநர் உவமைப் பெயர் என்க. உறுகுறைதாங்குதல் - பரத்தையிற் பிரிவும், உறவும் கண்டு பொறுத்தல்; கணவன் உற்ற துயரையும் பிணியையும் தாங்குதல்.
61. பொன் - திரு.
66. பழுதொழிந்து எழுதலாவது பிணமான தன்மையொழிந்து நிற்றல். (அரும்பத.) பழுது - உடம்பு (அடி. நல்).
67. மலருண்கண் - அன்மொழித்தொகை, கண்ணகி. இருந்தைக்க - இருக்க, வியங்கோள்.
71. தீவேந்தன் - பாண்டியன்
74. துடையா - துடைத்து (அடி. நல்); ஆயின் கண்ணீரைத்துடையாமல் என எதிர்மறைப் பொருளுரைத்தல் தக்கது. நினைந்தாள் - கனவை நினைந்தாள்.
75. செழுங்கோயில் - நாளோலக்கம்; பண்புத்தொகை.

## சீவகசிந்தாமணி

1. செங்கணன் - சச்சந்தன்; பண்புத்தொகை. அடைந்தார்க்கு அமிர்தம் அன்னவன்; அடையார்க்கு நஞ்சு போலும் சீற்றத்தான்.
2. கடிமார்பன் - உரிச்சொற்றொடர்.
3. கோதை நித்திலம் - பூமாலையும் முத்துமாலையும்; உம்மைத்தொகை நிழற்றலால் - நிழலைச் செய்தலால்
4. தருமன் - அறக்கடவுள்; வாமன் - அருகன்
5. அனன் - இடைக்குறை; தேனே - ஐஅசைநிலை
6. சேறலின் - நடத்தலினுலே அல்லி - தாமரை; அகவிதழுடையன அல்லியாகும். அல்லிசேர் அணங்கு - திருமகள்.
7. ஏத்தரும் - தொகுத்தல் விகாரம். ஏத்துதற்கு அரிய
8. வலந்தது - உரைத்தது; மருமகன் - சச்சந்தன் கருமம் - விசயையின் உடன்பிறப்பினனுக்குச் சச்சந்தன் உதவியாதல்.
9. அனங்கன் - உருவிலி, மன்மதன்; விள்ளார் - நீங்கார்.
10. உரோணி - உரோகணி என்பதின் விகாரம். திங்களும் உரோகணியும் இணை

தல் சச்சந்தன் விசயை இணைதலுக்கு உவமை.
11. தணப்பற - பிரிவின்றி
12. கேள்வியான் - நிமித்திகன்.
13. அரிஞ்சயன் - விசயையின் பாட்டன்.
14. மொழியல் - முன்னிலை எதிர்மறை வியங்கோள்.
15. துன்னலர் - பகைவர்; கழிபெரும் - ஒருபொருட் பன்மொழி.
16. உலம் - உருண்டைக்கல்; தரு - உவமைஉருபு
17 மனக்கு - மவ்வீறு அத்துச் சாரியை பெறுமல் உருபுடன் புணர்ந்தது அருகிய வழக்கு.
இஞ - இடைக்குறை; இன்ஞதவற்றை - குறிப்பு வினையாலணையும் பெயர்.
18. கழுமி - கெழுமி; மயங்கி.
19. முலையினுள் - திலோத்தமை; சிறுசொல் - பழிச்சொல்; பெயர் - புகழ்.
20. மலையரையன்மங்கை மைம்மலர்க்கோதை - இமவான், மேனை இருவர்க்கும்தோன்றிய பார்வதி.
21. தம்முன் - அண்ணன்; தொழுனை - யமுனை கண்ணன் கோபியர்க்குக் குருந்தொசித்த செய்தி வடநூல்களில் யாண்டும் இல்லை.
22. கழுதை - ஆண்கழுதை; வாமனுர் - புத்தர்
23. பேர்ப்பார் - போக்குவார்; போலும் - ஒப்பில்போலி
24. ஆயிரஞ்செங்கணுன் - இந்திரன்; ஆயிரம் அமைச்சர்களாகிய கண்களையுடைமையின் இப்பெயர் எய்தினுன் என்பர் கௌடலீயர்.
25. உரையல் - முன்னிலை எதிர்மறை வியங்கோள்; பூணுன் - சச்சந்தன்.
26. மூரி - பெருமை; பாரித்தேன் - பரக்கக் கூறினேன்.
27. ஏதம் - கேடு; பான்மை - தீவினை
28. கலை - மேகலை; உலையா - கெடாத
29. நாகரின் - நாகலோகத்தவரைப்போல
30. நாகிளம் - மிக்க இளைய; ஒருபொருட் பன்மொழி; கணினுள் - விசயை; இடைக்குறை.
31. துவர்வாய் - பவளம்போற் சிவந்தவாய்; உவமத் தொகை.
32. கழூஉ - கழுவி; சொல்லிசையளபெடை; இறந்த காலம் காட்ட அளபெடுப்பன யாவும் சொல்லிசையளபெடை என்க.
மால் - அருகன்
33. தம்பெருமான் - சச்சந்தன்.
34. அமர் - விருப்பம், கனவு மூன்றிற்கும் தேன்முதலிய மூன்றும் உவமையாயின.
35. பிண்டி - அசோகம்; ஓங்குபு - செய்பு வாய் பாட்டு வினையெச்சம்.
36. குன்றனையான் - சச்சந்தன்
38. சோர்ந்தாள் - விழுந்தாள்
39. காரிகை - அழகு; மாழ்க - குலைய.
41. பூமகள் - விசயை
42. கனிப்பான் - சீவகன்
43. கரும்பார்தோள் - கரும்பையொத்த தோள்; சலஞ்சலம் - ஒருவகைச் சங்கு.
44. வெள்ளில் - விளாங்கனி; ஓம்படை - பாதுகாப்பு;

ஆம்புடை - ஆகக்கடவது
45. காதி - பொருது
46. இயற்றுமின் - முன்னிலைப் பன்மை ஏவல்.
47. கிழி - சீலை; பயின் - பிசின்
48. ஆலும் - அசைந்தொலிக்கும்.
49. கொன்னெறி - கொல்லத் தொழில்.
51. திரிப்ப - செலுத்த
52. கோதுசெய்குணக் கோதினுட் கோதனுன் - செய்ந் நன்றிக் கேடுடையனுகிய கட்டியங்காரன்.
53. செகுத்திடு - கொல்வாய்
54. மணி அரசனுக்கும், நாகம் அமைச்சற்கும், செகுத்திடு என்ற சொல் இடிக்கும் உவமை என்பர் நச்சி.
55. தவளைக்கிண்கிணி - தவளைக்குரல்போலும் ஒலிக்கும் கிண்கிணி.
56. தாழ்ந்தவன் - நிமித்திகன்
57. பேர்க்குநர் - அசைப்பவர்
58. பார்த்திவர் - அரசர்
60. கண்ணிமையார் - தேவர்
62. மாண்டதன்று-மாண்புடையதன்று
64. நேடிய - தேடிய
65. குய்யம் - வஞ்சகம்
67. அஃகி - சுருங்கி
68. குன்றிற் கார்த்திகைவிளக்கிட்டன்ன என்றதான் கார்த்திகைச் சுடர்விழா பண்டுதொட்டு வழங்கி வருதல் உணரப்படும்.
69. காளமேகம் - கருக்கொண்ட முகில்
70. எற்று - உடைத்து; செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம்
71. பிறர்கள் - விகுதி மேல் விகுதி வரும் அரிய வழக்கு பல்லவர்காலத் தமிழில் காண்கிறோம்.
73. நீப்பருங்காதல் - விடுதற்கரிய அன்புப் பெருக்கு
74. நிகளம் - விலங்கு; குரங்க - தாழ
77. புரிசை - மதில்
78. கலி - தீயகுணங்கள்; நக்கான் - சிரித்தான்; பகுதி இரட்டித்துக் காலம் காட்டிற்று.
79. கங்குல் - வைகறை
80. பொம்மல் - பூரித்தல்
82. இரண்டுநாள் - சிறிதுநாள் என்னும் பொருட்டு
83. நூல் - ஆகுபெயராய் நூற்பொருளை உணர்த்திற்று
84. உரிமை - மனைவி
85. இறைவனதாணை என்றது ஓம் நமோ அரஹந்தாணம் என்னும்அருகமந்திரத்தை என்க.
86. அழன்று - அழல்போல் கனன்று; உலம்பினுன் - முழங்கினுன்
87. குருசில் - சச்சந்தன்; வாரி - யானைக்கூடம்; இங்குச் செண்டுவெளி
88. உரீஇ - உருவி; சொல்லிசையளபெடை; கயில் - மூட்டுவாய்
90. மத்தகம் - யானையின் சென்னி
91. உழக்குபு - உழக்கி; செய்புஎன்னும்வாய்பாட்டு வினையெச்சம்
92. இறைமகன் - சச்சந்தன்; அண்ணல்-கட்டியங்காரன்
93. நேமி - சக்கரப்படை; ஒய்யென - ஒலிக்குறிப்பு அரவு - இராகு.
95. நுதி - முனை
96. தடாயின - தடவின; பெயரெச்சம் வெள்வேல் என்ற பெயர்கொண்டு

முடிந்தது. அம்ம-அசை.
97. நாந்தகம் – வாள்; கப்பணம் - ஒருவகைப் படைக் கருவி
98. நீண்முடி - ஆகுபெயராய்ச் சச்சந்தனைக் குறிக்கும் என்பர் நச்சி. அன்மொழித் தொகையுமாம்.
99. நாகணையினன் -திருமால்; ஈண்டு சச்சந்தனைக் குறித்தது; ஒசிய - வீழ.
100. பெருந்தாதை-கன்னன, இளையோன்-அபிமன்னு.
102. ஏஎ - இரக்கக் குறிப்பு மொழி
103. தோய் – உவமவுருபு
104. இளையர் – ஆடல் பாடல் வல்ல மடவார்
105. புலவு - குருதி
106. கரிமாலைநெஞ்சினன் - கட்டியங் காரன்
110. கயில் – மூடுவாய்; இங்கு அணிகளைக் குறித்தலின் ஆகுபெயர். கிளவி - விசயை; ஆகுபெயர்.
112. உட்க - அஞ்ச; பைபய - மெல்ல மெல்ல
116. மம்மர் - வருத்தம்
117. பிலிற்ற - சொரிய
118. கறை - கப்பம்; தளி - கோயில்; சீமின் – இடித்துத்தூய்மை செய்மின்
120. ஓகை - உவகை என்பதின் திரிபு
124. இப்பாடலில் தற்குறிப் பேற்ற உவமையணி அமைந்துள்ளது.
126. அவலியா – அவலித்து; செய்யா என்னும் வாய் பாட்டு உடன் பாட்டு வினையெச்சம்.
127. எம்மனை – தாய், அண்மைவிளி
128. தோன்றல் - முருகப் பெருமான்
132. காளகவுடையினன் - தன் மகனை மயானத்திட வந்தமையின்கறுப்புடை அணிந்துவந்தவனாகிய கந்துக்கடன்
135. சீவ : சீவித்திரு என்ற ஓம்படைப்பொருள் பயக்கும் சமண வழக்கு
139. எம்மனை - எம்மில்லாளே, அண்மைவிளி
141. தூரியம் - (நால்வகை) வாச்சியம்
142. நல்கினன் - கட்டியங் காரன்
144. ஆற்ற - முடிவுபோக
145. பொம்மென - கடுக
147. அமரிகை - ஏமாங்கத நாட்டிற்கும் தண்டகாரணியத்திற்கும் இடையே உள்ள ஆறு
152. மலங்க – சுழல
157. ஆய்மதி - ஒளி குன்றிய மதி; ஆய்தல் - நுணுகுதல் எனப் பொருள் தரும் உரிச்சொல்.
161. நானம்-மான்மதச்சாந்து
162. சொலிப்பது - பெயர்ப்பது
164. கோடிகம் - தட்டு
168. மடம் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.
169. கூனி - செண்பகமாலை என்ற தெய்வம்
170. இஞ்சி – மதிற்சிறப்பு
173. மடவாள் – சுநந்தை
178. போதி – ஞானம்
180. ஞானத்தைக் குமரியென்றது அழியாதிருத்தலின்.
182. புலம் - ஆகுபெயராய் இசையை உணர்த்திற்று.
186. குணம் - நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம்.

நானெறி - நரககதி, விலங்குகதி, மக்கட்கதி, தேவகதி.

நல்லுயிர் - முத்தியில் விருப்புள்ள ஆன்மா; பவ்வியசீவன் என்பர்.

190. குணவதம் - இருசொல்லும் விரதம் என்னும் பொருட்டாகலின், பின்னதைப் பகுதிப்பொருள் விகுதி என்ப. விரதம் என்ற வடசொல் பாகதச் சிதைவாய் வதம் என வந்தது.

192. அறிவரன் - ஸ்ரீ வர்த்தமான மகா வீரராகிய தீர்த்தங்கரர்.

194. நால்வகைச் சரணம் - அருக சரணம், சித்த சரணம், சாதுசரணம், தன்மசரணம் என்பன.

197. மந்திரிவிழுங்கப்பட்டான் - மூன்றும் வேற்றுமைத் தொகை.

199. உத்திரட்டாதியான் - சீவகன்; பிறந்த நாளினால் பெயர்வழுங்குதல் மரபு.

201. கரியவன் - கண்ணன்

206. அவ்வியம் - மனக்கோட்டம்.

209. கேட்கிய - செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

212. பெய்பெய் - விரைவின்கண்வந்த அடுக்குத்தொடர்.

215. அதகம் - மருந்து

217. மீளி - வலிமை, பெருமை
மெய்ந்நெறி - தவநெறி.

218. தோன்றல் - அச்சணந்தியடிகள்.

## கம்பரிராமாயணம்

1. வாங்கரும் - வளையாத, கோட்டமில்லாத; பாதம் நான்கும் - நான்கடிகளாலமைந்த சுலோகங்கள்; நாட்டை-கோசல நாட்டினை; நறவம்-கள்; மூங்கையான்-ஊமையன்.

2. பணிலம் - சங்குகள்; குரம்பு - அணை; மேதி - எருமை; சாலி - நெல்.

3. அரவம், அமலை, ஓதை, ஓசை, தமரம், துழனி - என்பன ஓசை என்னும் பொருள் தரும் பரியாயச் சொற்கள்.

4. தண்டலை - சோலைகள்; எழினி - திரைச்சீலை; உருவக அணி இப்பாடலிற் காண்க.

5. தகைவரும்-தடுத்தற்கரிய; தண்டார் - பண்புத் தொகை; வாரி-கடல்.

6. செய்யாள் - திருமகள்; தூர்-சேறு; இப்பி-முத்துச் சிப்பி; போர்-வைக்கோற் போர்.

7. காந்தும்-ஒளிவிடும்; கடைசியர் - உழத்தியர்.

8. சிறியாழ் - தொகுத்தல் விகாரம் சிறிய+யாழ்.

9. இருல்-தேனடை; வேலை - கடல்.

10. மள்ளர் - உழவர் பிழைப்பரோ-தப்புவரோ, ஓகாரம் எதிர்மறை.

11. நாவி - மான்மதச்சாந்து; கத்தூரி.

12. தழீஇய - தழுவிய, சொல்லிசை அளபெடை.
13. கணுரின் - இடைக்குறை; இன் ஒப்புமைப் பொருளில் வந்த ஐந்தனுருபு.
14. குனிக்கும் - ஆடும்.
15. மருந்து - அமிழ்தம்.
16. மதுகை - ஆற்றல்; வாரணம் - சேவல்.
17. அரி - வண்டு; ஆர்க்கின்றரும் வினையாலணையும் பெயர்.
18. சலஞ்சலம் - சங்கின் விசேடம்; பகடு - காளை.
19. அமலை - ஆரவாரம்; அமலைத்து - குறிப்புவினை முற்று.
20. வெஃகும் - விரும்பும், பெயரெச்சம்; இறை - வரிப்பணம்; வங்கம் - கப்பல்.
21. சும்மை - சுமை; பாரம்.
22. புறவு - முல்லை நிலம்.
23. வண்டரோ-அரோ அசை; வண்டு - பால்பகா அஃறிணைப் பெயர்.
24. வேளை - மன்மதனை; மதர்க்கும் - செருக்கித் திரியும்.
25. உள்ளிட - நினைக்க.
26. முட்டு - குறை; அட்டில் - சமையற்சாலை; படப்பை - தோட்டம்.
27. சூட்டு - உச்சி
28. அங்கை - அகங்கை, தொகுத்தல் விகாரம்; அழகியகை எனப்பொருள் கூறலும் ஒன்று.
29. நுளைச்சியர் - வலைச்சியர் .
30. உரும் - இடி.
31. சிலம்புவ - ஒலிப்பன; வள்ளை - மகளிர் நெற் குற்றும்பொழுது தலைவனை வாழ்த்திப் பாடும் பாட்டு.
32. மள்ளர் - வேடர்; இரிக்கும் - பிரிக்கும்.
33. பள்ளி - படுக்கை.
34. குரவை-குரவைப்பாட்டு; செவ்வழி - ஒருபண்
35. தூம்பு - மதகுவாய்; காம்பு - மூங்கில்.
36. தடங்கண் - உரிச்சொற்றொடர்.
37. அரிசிக்குவை - அரிசிக் குவியல்; ஊட்டு இடம் - உண்பிக்கும் இடம்.
38. சுரக்கும் - அளிக்கும், நல்கும். செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று; பிலம் - சுரங்கம்.
39. ஏற்றம் - மேம்பாடு
40. நீத்தம் - வெள்ளம்
41. அளாய் - அளாவி, பொருந்தி; இறந்தகால வினையெச்சம்.
42. புயல் - மேகம்; புடைபெயர்வன - தோற்று ஒதுங்குகின்றன.
43. மறுக - கலங்க; அளகம் - கூந்தல்.
44. அயில்விழி - உவமைத் தொகை, வேல்போன்ற விழிகள்.
45. இகலுவ - மாறுபடுவன
46. கடிபொழில் - உரிச் சொற்றொடர்; பொலன்வரை - மேருமலை.
47. தரளம் - முத்துக்குவியல்; புளினம் - மணற்குன்று.
48. கழகம் - மன்றம்; முருகவேள் தலைச்சங்கத்துத் தமிழாராய்ந்தார் என்ற செய்தியை நினைந்து 'மயிலூர் கந்தனையனையவர்' கலைபயிலும் கழகம் என்றார் கம்பர்.
49. கோகிலம் - குயில்கள்; கேகயம் - மயில்கள்; வளை - சங்கு.
50. பழையர் - கள்விற்பவர்;

இசையின் கிழவர் - யாழ்ப்பாணர்.

51. கோதைகள் - மாலைகள்;
ஊதைகள் - காற்றுகள்;
காதைகள் - இலக்கியங்கள்.

52. சாயல் - மென்மை, கவின்.

53. வண்மை - ஈகை;
செறுநர் - பகைவர்;
வெண்மை - வெள்ளையறிவு.

54. ஏனல் - தினை;
இறுங்கு - சோளம்;
பண்டி - சகடம், பண்டம் ஏற்றப்பெறுவது பண்டியாயிற்று.

55. பல்கதி - மக்கட்கதி, தேவகதி, நரககதி, விலங்குகதிஎன்ற பிறப்புவகைகள்

56. சாறு - திருவிழா;
தலைமயங்கும் - கலக்கும்.

57. நந்து - சங்க வாத்தியம்;
தண்ணுமை - முழவு;
மள்ளர் - உழவர்.

# இலக்கண நூற்பாக்கள்

## எழுத்திலக்கணம்

1. எழுத்தெனப் படுப,
அகரமுதல் னகர விறுவாய்
முப்பஃ தென்ப;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.
தொல். எழுத்து. க

2. உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்.
நன். எழுத்து. ரு

3. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.
நன். எழுத்து. ருசா

4. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமும் குறிய.
,, ருஅ

5. நெடிலோ டாய்த முயிர் வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே. ,, ருச

6. வேற்றுமை யைம்முத லாறும்; அல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.
நன். உயிர். ௨

7. தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்து மாகும். ,, ச

8. வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தல் வருஞ்செய்யுள் வேண்டுழி.
நன். உயிர். ரு

9. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே. ,, சா

10. இஈ ஐவழி யவ்வும்; ஏனை
உயிர்வழி வவ்வும்; ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் ருகும். ,, கஉ

11. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.
நன். பத. சா

12. ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே. ,, சு

## சொல்லிலக்கணம்

13. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனா ரவரல பிறவே
ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே.
தொல். சொல். க

14. இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்ரு
வேற்றுமைக் கிடனுய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.
நன். பெயர். கஅ

15. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.
நன். பெயர். உசு

16. பொருண்முத லாறோ டளவைசொற் குணி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே ,, ருரு

17. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.
தொல். வே. மயங். உரு
நன். பெயர். சுா

18. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.
தொல். வினை. க

19. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.
நன். வினை. க

20. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.
நன். வினை. உ

21. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. நன். வினை. உக

22. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
யொழிய நிற்பது வினையெச் சம்மே. ,, உரு

23. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்

வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் ருறுமுக் காலமு முறைதரும் ,, உச

24. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப. ,, ககூ

25. வேறில்லை யுண்டைம் பான்மூவிடத்தன. ,, உ0

26. றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுந்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா றெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை யும்மையு மேற்கு மிங்கே.
நன். பத. கஅ

27. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.
நன். இடை. க

28. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.
நன். உரி. க

29. திணையே பாலிடம் பொழுது வினவிறை
மரபா மேழு மயங்கினும் வழுவே.
நன். பொது. உச

30. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே
,, சூ0

31. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றுகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.
நன். பெயர். ௰

32. அடைசினை முதலென முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.
தொல். கிளவி. உ௬

33. கடிசொல் இல்லைக் காலத்துப் படினே.
தொல். எச்ச. ரு௬

## அகப்பொருள்

34. முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.
தொல். அகத். ௩

35. முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.
தொல். அகத். ௪

36. தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப.
தொல். அகத். உ௦

37. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.
தொல். பொருள். க௬

38. எல்லா வுயிர்க்கு மின்ப மென்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.
தொல். பொருள். உ௭

3. பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே.
தொல். மெய்ப். ௨௫

## புறப்பொருள்

### பாடாண் பாட்டு

40. ஒளியும் ஆற்றலும் ஓம்பா வீகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று.
(பு. வெ. மா.)

### காஞ்சி

41. வெஞ்சின மாற்ருன் விடுதர வேந்தன்
காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று. ,, 4:1

### வஞ்சினக் காஞ்சி

42. வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப
வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று. ,, 4:9

### முதுமொழிக் காஞ்சி

43. பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருள்முடி புணரக் கூறின்று. ,, 10:30

### பொருண்மொழிக் காஞ்சி

44. எரிந்தி லங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பெருள்மொழிந் தன்று. ,, 10:32

### இயன்மொழி

45. அ. இன்னோ ரின்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல அவையெமக் கீகென
என்னோரு மறிய எடுத்துரைத் தன்று. ,, 9:6

ஆ. மயலறு சீர்த்தி மான்தேர் மன்னவன்
இயல்பே மொழியினும் அத்துறையாகும்.
,, 9:7

# அணிகள் சில

## தன்மையணி

46. எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்.
தண்டி. பொருள். 29.

## உவமையணி

47. பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை.
,, 31

## உருவகவணி

48. உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ துருவக மாகும்.
,, 36.

## சொற்பொருட் பின்வரு நிலையணி

49. முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே.
,, 42.

## வேற்றுப் பொருள் வைப்பணி

50. முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை யுலகறி பெற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.
,, 47.

## ஒட்டணி

51. கருதிய பொருடொகுத் ததுபுலப் படுத்தற்
கொத்ததொன் றுரைப்பினஃ தொட்டென மொழிப.
,, 52.

## தற்குறிப் பேற்றவணி

57. பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி யயலொன்று
தான்குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம்.

,, 56.

## பாவிகவணி

53. பாவிக மென்பது காப்பியப் பண்பே.

,, 97.